# சூர்யா

1

சூர்யா கைகளை வளைத்துச் சோம்பல் முறித்தாள். கடந்த நான்கு மணி நேரம் விடாமல் படித்தது முதுகை வலிக்கத்தான் செய்தது. படிக்கும்போது படிப்பில் இருந்த சுவாரசியத்தில் வலி ஒன்றும் பெரிய விஷயமாகத் தெரியவில்லை.

''அக்கா லைட்டை அணைத்துத் தொலையேன். நிம்மதியான தூக்கத்தைக் கெடுக்கவா எனக்கு அக்காவா பொறந்தே'' - என்று ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் தம்பி சரத் அரைத் தூக்கத்தில் எரிச்சலடைய, சூர்யாவிற்குத் தம்பியின் தூக்கத்தைக் கெடுக்க இன்னும் என்ன செய்யலாம் என்று யோசனையாக இருந்தது.

''ப்ளீஸ்க்கா! லைட்டை அணையேன்'' என்று பக்கத்துப் படுக்கையில் உருண்டு கொண்டிருந்த தங்கை ஸ்ருதி கெஞ்ச இளகினாள் சூர்யா.



''படிக்கிற பிள்ளைக்குப் பத்து மணிக்கெல்லாம் அப்படி என்ன தூக்கமோ?'' என்று முணுமுணுத்தபடி டியூப் லைட்டை அணைத்து விட்டு டேபிள் லைட்டைப் போட்டுக் கொண்டாள்.

டீ நிரம்பிய ப்ளாஸ்கைக் கையில் எடுத்துக் கொண்டு சூர்யாவின் மேஜையில் வைத்த விஸ்வநாதர் பேத்தியின் கூந்தலை ஆசையாக வருடியபடி, ''ரொம்ப நேரம் கண் முழிச்சி படிக்காதம்மா. சீக்கிரம் படு'' - என்றார்.

''அவளைப் படிக்காதே போதும், போதும்ன்னு சொல்லுங்க. என்னைப் படி, படின்னு சொல்லுங்க. இந்த வயசானவங்களுக்குச் சின்னவங்க எது செய்தாலும் நேர்மாறா எதையாவது சொல்லிக்கிட்டே இருக்கணும் போல'' - அரை குறை தூக்கத்திலும் தம்பியின் தெளிவான புலம்பலில் விஸ்வநாதருக்கும் சூர்யாவிற்கும் சிரிப்பு வந்தது.

''கழுதை'' என்று செல்லமாக வைதபடி அவனது போர்வையை ஒழுங்காக அவன் கழுத்துவரை மூடி விட்டார் விஸ்வநாதர்.

அதற்குள் காலிங்பெல் ஓசை கேட்க, ''அப்பா வந்தாச்சு போல இருக்கு தாத்தா'' என்றபடி புத்தகத்தை மூடி விட்டு எழுந்தாள் சூர்யா.

மாடியிலிருந்து தாத்தாவும், பேத்தியும் இறங்குவதற்குள் மாதவி கதவைத் திறந்து விட்டிருந்தார்.

''போன காரியம் என்னடா ஆச்சு'' விஸ்வநாதர் கேட்க,

பெருமூச்சுதான் முதலில் வந்தது நந்தகுமாருக்கு. பின் சமாளித்து,

''ஏர்போர்ட்டில் மணிகண்டனைச் சந்திக்கவே முடியவில்லையப்பா. அவர் வந்த டில்லி ப்ளைட்டை தீவிரவாதிகள் கடத்தி விட்டார்களாம். ஏன்? எங்கே? எதற்கு? என்று மும்முரமாக, பரபரப்பாக ஏர்போர்ட்டில் வேலை நடந்து கொண்டிருக்கு.

வேற விஷயம் ஒன்றும் தெரியவில்லை. டி.வி.யைப் போடும்மா சூர்யா, என்ன ஏதுன்னு ஏதாவது தெரியுதா பார்ப்போம்."

"ப்ச்ச..." என்று நொந்தார் விஸ்வநாதர்.

அவருக்குச் சொந்தமான ஐம்பது ஏக்கர் நிலம் மகாபலி புரத்தில் பீச்சு பக்கத்திலிருக்கிறது. அதை ரிஸார்ட் ஆக டெவலப் செய்ய, ரொம்ப முனைப்பாகக் கேட்டு, விலை பேச என்று வந்த மணிகண்டனின் ஏரோப்ளேன் தான் கடத்தலில் சிக்கி விட்டிருந்தது. எப்பொழுதுமே அந்த நிலம் விற்க எத்தனிக்கும் போதெல்லாம் ஒரு தடங்கல் வந்து விடுகிறதே என்று நொந்து போனார் விஸ்வநாதர்.

"இப்ப கொஞ்ச காலமாகவே தீவிரவாதிகளின் அமைப்பும், ஊடுருவலும் இந்தியாவில் அதிகம் இருந்தாலும், நம்ம இந்திய உளவுத்துறை திறம்படச் செயல்பட்டு அவற்றை இவ்வளவு நாள் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்த பிறகும், இந்த அசம்பாவிதம் எப்படி நடந்ததுன்னே தெரியவில்லை" என்று நந்தகுமார் டி.வி.யில் கண்களை ஒட்டியபடிச் சொல்ல, அவரின் மனைவி மாதவி மெல்ல அவரின் காலணிகளைக் கழற்றி ஸ்டாண்டில் வைத்தார்.

"அப்பா நான் கூட உங்ககிட்டே இது பற்றிச் சொல்லணும்னு தான் இருந்தேன்" சூர்யா மெல்ல யோசித்துப் பேச,

"என்னம்மா? சொல்லு" என்று அவர் உந்த,

"நம்ம ஏரியாவில் கூட தீவிரவாதிகள் நடமாட்டம் இருக்கறாப்பல இருக்குப்பா. நேற்று டிபார்ட்மெண்ட் ஷாப்புக்கு போன போது, அங்கே ஒரே கலாட்டா. ஒரு குழந்தையைத் தூக்கி வைச்சு பந்தாடிட்டாங்க. என்ன? ஏதுன்னு எனக்கு எல்லாம் புரியறதுக்குள்ளே காட்சிகள் 'பளிச் பளிச்'ன்னு மறைஞ்சி போச்சு. குழந்தையோட அம்மா அப்படியேத்



துடிச்சுப் போயிட்டாங்க. ஆனா கடைசியில் குழந்தை அவங்க கையில் சுகமா சேர்ந்துட்டது. ஆனா, காட்சிகளில் சம்பந் தப்பட்ட ஆறடி மனிதனின் முகம்... கரெக்ட் தீவிரவாதியின் முகம். என் கண்ணுலேயே இருக்குப்பா.

"சாமான் வாங்கிட்டு நான் வெளியே வந்த போது, தெரு முனையில் அவன், எப்படியோ தப்பித்து இன்னொரு தாடிக்கார வேஷதாரி கிட்டே சின்னக் குரலில் அக்கம், பக்கம் நோட்டமிட்டுக் கொண்டு என்னத்தையோ ரகசியமா பேசறான். நான் எழுதித் தரேன் அவன் சரி கிடையாது.

"சும்மாயிரு சூர்யா. வெளியே போனோமா, வந்தோமான்னு இருக்கணும். உனக்கு ஏன் இப்படி மற்றவர்களை நோட்டம் பார்க்கும் வேலை? அத்தோடு தீவிரவாதிகள் நீ நினைக்கிற மாதிரி பகல் நேரத்தில் ரோடுகளில் எல்லாருக்கும் தெரியற மாதிரி வலம் வர மாட்டார்கள்" - மாதவி மகளின் அருகில் அமர்ந்தபடி மகளின் பேச்சைத் தடை செய்ய.

"இல்லம்மா, நகரத்தை விட்டுக் கொஞ்சம் தள்ளி இருக்கிற நம்ம மாதிரி ஏரியாவிலேதான் இந்தத் தீவிரவாதிகள் ஒளிந்து கொண்டு ரகசிய வேலைகள் செய்வார்கள்னு நான் பேப்பரில் வேற படிச்சேன். அப்பா... எதுக்கும் போலீஸ்லே போய் சந்தேகப்படும் படியான ஆட்கள் நடமாட்டம் இருக்குன்னு கம்ப்ளெயிண்ட் கொடுக்கலாமா?" என்று தீவிரமாகக் கேட்க,

விஸ்வநாதர் இடை புகுந்தார்.

"நான் கூட அந்த நிகழ்ச்சியைப் பற்றிக் கேள்விப்பட்டேன் சூர்யா. அது வெறும் குழந்தை கடத்தல் நிகழ்ச்சி மாதிரி தான் பேசினார்கள். கடன் கொடுத்ததைத் திருப்பிக் கொடுக்க மறுத்ததால் ஏதோ மிரட்டல் விவகாரம் போல. நிஜமான கடத்தல் இல்லையாம். இப்ப சுமூகமாக அந்தப் பண விவகாரம் செட்டில் ஆயிட்டதாம். தேவையில்லாமல் வீணா தீவிரவாதப் புரளியை நீ கிளப்பிடாதே. படிப்பில் கவனம் செலுத்து. கடைசி வருட என்ஜினீயரிங் படிப்பு என்பது

சதவீதம் மார்க் எடுக்க வேண்டும் போய்ப் படி'' என்று முடித்தார்.

நிகழ்ச்சி நடந்தபோது சூர்யா இருந்தாளே. அது மிரட்டல் போலவா தெரிந்தது.

இல்லையே...

ஒரே ஓட்டமும், துரத்தலும்... பின் தானே திடீரென்று குழந்தையைப் பணயமாக வைத்துப் பந்தாடினார்கள். அதில் அந்தக் குழந்தையின் தாய் ஒன்றும் புரியாமல், பரிதாபமாக மலங்க மலங்க விழித்ததும், புலம்பியதும் இன்னும் காதில் ஒலித்துக் கொண்டுதானே இருக்கிறது.

சூர்யாவின் மனம் அதைச் சாதாரண பணம் பறிக்க நடந்த மிரட்டல் நிகழ்ச்சியாக ஏற்க மறுத்தது.

அதுவும் அந்த ஆறடி மனிதனின் கூர்மையான கண்களும், அழுத்தம் திருத்தமான முகத்துடன் கூடிய சிக் என்ற உடலமைப்பும் தன்னை ஹீரோவாக நினைத்துக் கொள்வான் போல.

அதுவும் சூர்யா அவனை கவனிக்கையில் அவள் கண்களை நேருக்கு நேராகப் பார்த்துக் கண் சிமிட்டி விட்டுப் போனதை நினைக்கையில் இன்னும் நெஞ்சு படபடவென்று அவளுக்கு அடித்தது.

திமிர் பிடித்தவன்.

## 2

''ஸ்ருதி... ஏய் ஸ்ருதி... எழுந்திரு'' - தூங்கிக் கொண்டிருந்த தங்கையைத் தட்டி எழுப்பினாள் சூர்யா.



''ம்ம்... ம்... ம்...'' என்ற குரல் மட்டும்தான் எழும்பியதே தவிர வேறு ஓர் அசைவையும் காணும்.

''என்னோட வாக்கிங் வரேன்னு சொன்னேயில்லே எழும்புடி... சீக்கிரம்'' என்று பட்... பட்... என்று முதுகில் அடிக் கொடுத்தாள் சூர்யா.

சிணுங்கியபடி எழுந்த ஸ்ருதி, சூர்யாவை மேலும் கீழும் பார்த்தாள். கண்களில் தூக்கம் முழுவதும் கலையவில்லை.

'உன்னைப் போல சிக்கென்று அழகாக இருக்க ஆசைதான். ஆனால் தூக்கம் வருதுக்கா. நாளையிலேயிருந்து வாக்கிங் வரேன்'' என்றபடி தூக்கக் குரலில் கூறி மறுபடி படுக்கையில் சரிந்தாள்.

தினமும் காலையில் இது ஸ்ருதி படிக்கும் பாட்டுதான்.

ஸ்ருதி இந்த வருடம் காலேஜில் சேர்ந்ததிலிருந்து, அவளுடைய பூசினாற் போன்ற உடல் அமைப்பு அவளை உறுத்தியது. ஆனால் அதற்காக ஒரு பிரயத்தனமும் செய்ய மாட்டாள். நொறுக்குத் தீனியை அவளால் குறைக்க முடியவில்லை. ஆனால் அக்காவைப் போல் மெல்லிய கொடியிடையுடன் அழகாக இருக்க வேண்டும் என்ற ஆசை மட்டும் நிறைய உண்டு.

விடியற்காலையில் எழுப்பினால் அவளை அசைக்க முடியாது. இரவு பேச்சு மட்டும் உறுதியாக இருக்கும். நாளை எப்படியும் வாக்கிங் வந்துடுவேன் எழுப்பாமல் நீங்கள் போனால் உங்களுடன் பேசவே மாட்டேன் என்று மிரட்டி விட்டுத்தான் படுப்பாள்.

சூர்யாவும் தங்கையை ஒரு நாள் விடாமல் அழைத்துப் பார்த்து விட்டுதான் போவாள்.

''சோம்பேறி...'' என்று முணுமுணுத்தபடி வெள்ளை நிற சுடிதாரும் வாக்கிங் ஷூவுடன் ரெடியானாள்.

''சூர்யா...'' என்ற தாத்தாவின் குரல் கீழே இருந்து கிளம்ப, சூர்யா மாடிப்படிகளை இரண்டிரண்டாகத் தாவி இறங்கினான்.

சரத் கிரிக்கெட் கோட்சிங் என்று வெள்ளை நிற பேண்ட், சர்ட்டில் தோளில் சரிந்த கிரிக்கெட் பேக்குடன் ரெடியாக நின்று கொண்டு லேட் ஆகுது என்று கத்திக் கொண்டிருந்தான்.

மாதவி காலை மாலைக்கான சாப்பாட்டு வேலையை வேக வேகமாகச் செய்து கொண்டிருந்தார். அவருக்குப் பத்து மணிக்கு ஆபீஸில் இருக்க வேண்டும். இன்கம்டாக்ஸ் ஆபீஸில் அதிகாரியாக வேலை பார்க்கும் மாதவி, பிள்ளை களையும் கணவரையும் மாமனார்ன் உதவியினால் கஷ்ட மில்லாமல் கவனிக்க முடிந்தது.

நந்தகுமார், தனி அறையில் காலையில் குறைந்தது முக்கால் மணி நேரமாவது தியானம் என்று ஆழ்ந்து விடுவார். அப்போது தான் மனசு ரொம்ப சுறுசுறுப்பாக, பாஸிடிவ் ஆக யோசனை செய்கிறது என்பார்.

''இன்றைக்கும் ஸ்ருதி வரல்லையா?'' என்றபடி விஸ்வ நாதரும் வாக்கிங் செல்ல ட்ராக் சூட்டில் ரெடியாக நின்றார்.

''ஆமாம். போகலாம் தாத்தா'' என்று அம்மாவிடம் விடை பெற்றுக் கொண்டு இருவரும் கிளம்பினார்கள். சரத் சைக்கிளை மிதித்துக் கொண்டு போனான்.

தாத்தாவை நினைத்தால் சூர்யாவிற்குப் பெருமையாக இருக்கும். தனக்கு வயதாகி விட்டது என்று நினைக்கவே ட்டார். மற்றவர்கள் அப்படி நினைக்கும்படி இருக்கவும் ட்டார். சுறுசுறுப்புக்குப் பேர் போனவர்.

றுபத்தைந்து வயது இருக்குமா? அவர் நடக்கையில் ாவிற்கு கூட ஓடினால்தான் அவர் வேகத்திற்கு ஈடு க்க முடியும்.



விடியற்காலை நேரத்து சுத்தமான காற்று, பறவைகளின் கீச் கீச் சத்தம், மொட்டு விரிந்து மலரும் மலர்களின் நறுமணம் என்று ரசித்துக் கொண்டு, அரக்கப் பரக்க ஓடாமல் நடக்கவே சூர்யாவிற்கு ரொம்பப் பிடிக்கும்.

ஆனால் விஸ்வநாதர், வியர்க்க விறுவிறுக்க வேக நடைதான் உடல் நலத்திற்குச் சிறந்தது என்று சூர்யாவையும் வேக நடைக்குப் பழக்கி விட்டிருந்தார்.

அப்படியும் சில சமயங்களில் சூர்யா தாத்தாவை முன்னே விட்டு விட்டுப் பின் தங்கி விடுவதும் உண்டு.

அன்றும் அப்படித்தான், சிறிது நேரம் நடந்தவுடனே, இது வரை பார்த்திராத இரண்டு பல வண்ணச் சிட்டுக் குருவியை ஒரு மரக்கொடியில் பார்த்தவுடனே வேகத்தைக் குறைத்தாள்.

என்ன அழகு?

எத்தனை நிறங்கள்?

அது இரண்டும் அலகுடன் அலகு இடித்துச் சண்டை யிட்டு... இல்லை கொஞ்சிக் கொண்டிருந்த அழகு...

மரத்தின் பக்கத்தில் நாயோ, பூனையோ ஏதோ ஏற்படுத்திய சலசலப்பில் இரண்டும் பறந்து விட்டன.

மீண்டும் சூர்யா நடக்கத் தொடங்க, இடது புறத்தில் குறுகலான அந்தத் தெருவை ஏதேச்சையாகத் திரும்பிப் பார்க்க, சூர்யாவின் புருவங்கள் உயர்ந்து கண்கள் விரிந்தன.

ஆறடி மனிதன் அன்று டிபார்ட்மெண்ட் கடையில் சந்தேகம் வரும்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த ஆசாமி.

ஆள் நடமாட்டமில்லாத ஒரு வீட்டின் கேட்டில் நின்று உள்ளே எட்டிப் பார்த்தபடி கையில் இருந்த காமிராவை இயக்கி, போட்டோ எடுத்துக் கொண்டிருந்தான்.

சூர்யாவின் சந்தேகம் உறுதியானது. வந்த வேலை முடிந்து விட்டதோ என்னவோ? பிறகு வேக வேகமாக அவன் மறுபடியும் நடக்க, சூர்யாவும் தன் பாதையின் போக்கை மாற்றி அவனைப் பின் தொடர்ந்தாள்.

அவன் வெகு வேகமாக நடக்க சூர்யாவின் நடையும் வேகமெடுத்தது.

யார் அவன்?

எங்கு போகிறான்?

இருப்பிடம் எங்கே?

என்ன செய்கிறான்?

என்று எதையாவது அறிந்து கொள்ளும் நோக்கம் அவளிடம் அதிகரித்தது.

இப்படியும் அப்படியுமாக தெருக்களில் மாறி மாறி நடந்தவரின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல், அவனை துரதிர்ஷ்ட வசமாகப் பார்வையில் இருந்து தவற விட்டாள்.

சூர்யாவிற்குப் பெரும் ஏமாற்றமாக இருந்தது.

நாட்டின் நலத்தை எப்பொழுதுமே பெரிதாக எண்ணும் மனம் சூர்யாவிற்கு உண்டு.

அந்த ஆறடி மனிதனின் நடவடிக்கைகளில் ஏதோ 'மர்மம்' இருப்பதை அவள் மனம் உணர்ந்தது.

அவள் கணிப்புத் தவறா? சரியா? என்று அறிந்து கொள்ளவும் ஆவலாக இருந்தது.

தினமும் செய்தித் தாளில் தீவிரவாதிகளின் நாசச் செயல்கள் பற்றிய செய்தி எந்த மூலையிலாவது இருந்து அவள் கண்களில் பட்டு விடும் நமது பாராளுமன்றத் தாக்குதல், அமெரிக்காவின் டிவின் பில்டிங் அட்டாக், அதனால் நடந்த உயிர் சேதங்கள்,



அவற்றை எண்ணிப் பார்த்தால், தீவிரவாதிகள் என்ற பேச்சை எடுத்தாலே, எங்கிருந்தோ வீரம் வந்து அவளை ஆக்ரமித்து விடும்.

சுதந்திரம் அது, இது என்று சொல்லி இளம் நெஞ்சுகளில் நஞ்சை விதைத்து, உலகத்தின் நிம்மதியைக் கெடுத்து, முன்னேற்றம் அடைய விடாமல் அழிவை நோக்கி நாடு செல்கிறது என்பது அவளின் கணிப்பு.

ஆள் நடமாட்டமில்லாத, விடிந்தும், விடியாத அந்தக் காலைப் பொழுதில் மர்மமான முறையில் ஒரு வீட்டை போட்டோ எடுத்த ஆறடி மனிதனைப் பற்றி தாத்தாவிடம் சொல்லலாமா? வேண்டாமா? என்று உள்ளுக்குள் குழப்பமாக இருந்தது. ஆதாரமாக ஒன்றும் காட்டாமல் மீண்டும் ஆறடி மனிதனைப் பற்றிய பேச்சு எடுத்தால் தாத்தாவிடம் கண்டிப்பும் அட்வைஸும் தான் கிடைக்கும் என்று அவரிடம் சொல்லாமல் விட்டாள் சூர்யா.

பிறகு நாட்கள் மெல்ல படிப்பில் உருண்டன.



3

அன்று தொலைபேசி அழைக்க, பதில் கொடுத்தாள் சூர்யா.

"சூர்யா, என்கிட்டே விக்ரம் படத்துக்கு இரண்டு டிக்கெட் கிடைச்சிருக்கு நாம போகலாமா? வரியா?" - கல்லூரியில் கூட படிக்கும் தோழி லாவண்யா பரபரப்பாகக் கேட்க,

''ஏய் லாவி, எக்ஸாம்க்குப் பிரிபேர் பண்ணற ஐடியா எல்லாம் இல்லையா?'' - சூர்யா கிண்டல் கலந்து பேச,

''கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணினா ஒன்றும் குடி முழுகி விடாது. அதோடு நீ எல்லாம் படிக்காமல் போனாலே பாஸ் பண்ணற கேஸ். சும்மா பிகு பண்ணாமல் வா சூர்யா. ப்ளீஸ், எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த ஃபர்ஸ்ட் டே, ஃபர்ஸ்ட் ஷோக்கு டிக்கெட் வாங்கினேன் தெரியுமா?''

சற்று யோசித்த சூர்யாவும் அம்மாவிடமும் தாத்தாவிடமும் அனுமதி வாங்கிய பின், லாவண்யாவிடம் சரி என்றாள். சரத்தும், ஸ்ருதியும் தெரிந்தால் சூர்யாவை உண்டு இல்லை என்றாக்கி விடுவார்கள்.

சினிமா தியேட்டர் வாசலில் பயங்கரக் கூட்டம். இரண்டு மூன்று தியேட்டர்கள் ஒரே காம்ப்ளக்ஸில் இருப்பதால் மூன்று படங்கள் பார்க்க வந்த கூட்டத்தையும் சேர்த்து பயங்கரக் கூட்டம்.

ரொம்ப நாட்கள் கழித்துப் பார்ப்பதால், சூர்யாவும், லாவண்யாவும் ஒரே அரட்டை அடித்துக் கொண்டு, மெல்லக் கூட்டத்தை ஊடுருவி நடக்க,

திடீரென்று வழி வழி என்று கத்தியபடி முகத்தில் அப்பட்டமான பயத்துடன் ஓர் அப்பாவி வாலிபன் வெகு பற்றத்துடன் யாரோ அவனைக் கொலை வெறியுடன் துரத்துவது போல் முண்டியடித்துக் கொண்டு ஓட, அதைக் கவனித்த சூர்யா பின்னே திரும்பினாள்.

மை 'காட்' அவன் ஆறடி மனிதன். பட்டப் பகலில் இத்தனை கூட்டத்தில் இந்த பயங்கரவாதி அந்த வாலிபனை என்ன செய்ய நினைக்கிறான்?

அந்த வாலிபனை மீண்டும் திரும்பிப் பார்த்தாள் சூர்யா. அவன் கூட்டத்தின் சிக்கலில் வேகமாக முன்னேற முடியாமல்



தத்தளித்தபடி இருக்க, பின்னோடு வந்த அந்த ஆறடி மனிதன் சூர்யாவைத் தாண்டி வெகு லாவகமாக அவனைத் தாவிப் பிடிக்க எத்தனித்தபடி ஒரே குறியாக ஓட, சூர்யா நொடியில் முடிவெடுத்துப் பக்கத்தில் வந்த அந்த ஆறடி மனித தீவிரவாதியைக் குண்டு கட்டாக பின்னோடு ஒரே அமுக்காகக் கட்டிக் கொண்டாள். லாவண்யாவிற்கு சூர்யாவின் நடவடிக்கை பிரள வைத்தது.

''லாவி இவனை பிடி, பிடி... எல்லாரும் பிடியுங்கள்! சதிகாரன் பயங்கரவாதி'' என்று சூர்யா அலற.

சூர்யாவின் மென்மையான கைப் பிடியில் சிக்குண்டு இருந்தவன் சில நொடிகள் சிலைப் போல் நின்று விட்டான். பின் தன்னைச் சமாளித்து முன்னோக்கிப் பார்த்தவன் கண்களில் துரத்தியவன் காணவில்லை.

பின் தன்னுடைய வலிப்பு வனப்பு மிகுந்த கைகளை அவள் பிடியில் இருந்து வெகு சுலபமாக உருவிக் கொண்டு, அவன் முதுகோடு ஒட்டிக் கிடந்தவளை ஓர் இழுப்பில் அவன் முன் நிறுத்தி விட்டான்.

தலைவனின் படத்தைப் பார்க்க வந்த ரசிகர்களின் க[illegible] கோஷம் காதைப் பிளந்ததில் சூர்யாவின் அலறல் யார் செவி[illegible] யிலும் விழுந்த மாதிரி தெரியவில்லை. கூட்டத்தின் நெரிசலி[illegible] இவள் ஒருவனைக் கட்டிப் பிடித்துக் கத்தியது கூட நெரிசலி[illegible] உரசல் போலத்தான் இருந்தது. லாவண்யாதான் ஒன்று[illegible] புரியாமல் மலங்க மலங்க விழித்தாள்.

கண்களில் உக்கிரத்துடன் சூர்யாவை முன்னுக்கு இழு[illegible] ஆறடி மனிதனின் கண்கள், சூர்யாவைப் பார்த்தவுட[illegible] கூர்மையானது. அவன் புருவங்கள் மேல் நோக்கி எழும்பி[illegible] ஏதோ பேரதிசயம் நிகழ்ந்தது போல அவனை மேலும் கீழும[illegible] ஆராய்ந்தான்.

அதற்குள் சூர்யா அவன் நெஞ்சில் மடமட வென்று குத்தினாள். குத்திய அவள் கைதான் வலித்தது. அவன் அரக்கனைப் போல நின்று கொண்டிருந்தான்.

''சூர்யா என்ன ஆச்சு உனக்கு'' என்று லாவண்யா அவளை பயந்து போய் தன் பக்கம் இழுக்க முயற்சிக்க.

''அழகான பெயர். உன்னைப் போலவே'' என்று முறுமுறுத்த ஆறடி மனிதனின் பார்வை லாவண்யாவிடம் திரும்பியது.

''இந்த மாதிரியான கேஸ்களை பவுர்ணமி நேரத்தில் வெளியிடங்களுக்கு அழைத்து வருவது நல்லதல்ல'' என்று முகம் நொடியில் கடினமாகக் கூறியவன் சூர்யாவை ஒரே தள்ளாக லாவண்யாவின் மேல் தள்ளி விட்டு மீண்டும் கூட்டத்தினுள் புகுந்து வெகு வேகமாக முன்னேறி விட்டான்.

சூர்யா மீண்டும் அந்த ஆறடி மனிதன் புறமாக 'டெரரிஸ்ட்! டெரரிஸ்ட்!' என்று கத்தியபடி நகர எத்தனிக்க, லாவண்யா அவள் வாயைத் தன் கரங்களால் பொத்தி தன் புறமாக இழுத்துச் சென்றாள்.

ஒரு வழியாக காம்ப்ளக்சில் நுழைந்தார்கள். கூட்டத்தின் நெரிசலில் இருந்து விலகிக் கொஞ்சம் 'ப்ரி'யாகக் காற்று வந்த இடத்தில் நின்றார்கள்.

''என்ன ஆச்சு உனக்கு'' என்று உதட்டைக் கடித்தபடி தலையில் கை வைத்து நின்ற சூர்யாவைப் பார்த்து லாவண்யா கேட்க,

''அவனை நான் இதற்கு முன் மிகவும் சந்தேகப்படும் படியான இரண்டு சந்தர்ப்பங்களில் பார்த்து இருக்கிறேன். இப்பவும், அவன் இன்னொருத்தனைத் துரத்திக் கொண்டு ஓடினதை நீ பார்க்கலில்லை? கண்களில் வெறியோடு அவன் போனதைப் பார்க்கலில்லை?'' வேக வேகமான குரலில் சூர்யா சொல்ல,



''கண்களில் வெறியை எங்கே பார்த்தேன். நீ கட்டிப் பிடித்ததில் அந்த ஆறடி மனிதன் கிறங்கிப் போனதைத்தான் பார்த்தேன்'' என்று லாவண்யா கிண்டலடித்துச் சொல்லிச் சிரிக்க,

கண் முன்னே மீண்டும் அவனைத் தப்பிக்க வைத்த கவலையில் லாவண்யா சொன்னதை மனதில் வாங்காமல், ''இந்த ஏரியாவிலேயே தான் அலைகிறான். இந்த தாத்தாவுக்குத் தெரியாமல் போலீஸ் கம்ப்ளையிண்ட் ஒன்று கொடுக்க வேண்டியதுதான். இப்படி ஒரு சந்தேகப்படும் நபர் இருப்பதைத் தெரிஞ்சும், தெரியாதது போல, யாருக்கு வந்த வினையோன்னு என்னால இருக்க முடியவில்லை. நான் போலீஸுக்குப் போகத்தான் போறேன்.''

''உனக்குப் பைத்தியம்ன்னு அவன் சொல்லாமல் சொன்னது சரிதான் போல இருக்கு. அவனைப் போய்க் கட்டிப் பிடித்து...'' என்று சூர்யாவின் தீவிரம் புரியாமல் வாயைப் பொத்திக் கொண்டு லாவண்யா குறும்புடன் சிரிக்க,

சூர்யா பட்டென்று அவளை அடித்தாள். அதற்குள் சினிமா காட்சி தொடங்க, தியேட்டர் உள்ளே எல்லாரும் நுழைய, கொஞ்சம் கூட சினிமா பார்க்கும் ஆர்வம் இல்லாமல், குழம்பி நின்ற சூர்யாவைத் தள்ளிக் கொண்டு போனாள் லாவண்யா.



## 4

மறுநாள்.

''அக்கா சீக்கிரம் வாயேன். ஃப்ரீயா சினிமா நடக்குது. வெ இண்ட்ரஸ்டிங்'' என்று பாத்ரூம் கதவு திறக்கும் சத்தம் கேட்

சன்னலில் இருந்து திரும்பிப் பார்க்காமலேயே ஸ்ருதியும் சரத்தும் குரல் கொடுக்க,

ஈரத்தலையை டவலால் முடிந்தபடி சன்னலில் எட்டிப் பார்த்த சூர்யாவிற்கும் சிரிப்பை அடக்க முடியவில்லை.

புதிதாகத் திருமணமான ஜோடி ஒன்று பக்கத்து வீட்டிற்குச் சில நாட்கள் முன்பு குடி வந்திருந்தது. அந்தப் பெண் காலையில் குளித்து விட்டு, சாமிக்கு பூஜை செய்வது போல், புருஷனுக்கு தீபாராதனை காட்டி மணி அடித்துக் கொண்டிருந்தாள். அவனும் அவளின் மூக்கை, உதட்டைத் தொட்டு சில்மிஷம் செய்து கொண்டிருந்தான்.

இந்த யுகத்தில் இந்த மாதிரி காட்சிகள் இளசுகளுக்குச் சிரிப்பு மூட்டாதா என்ன?

மூத்தவளாய் லட்சணமாய் தன்னை அடக்கிக் கொண்ட சூர்யா இளையவர்களை விரட்டினாள்.

"இது என்ன அசிங்கம். திருட்டுத்தனம். உங்களை தாத்தா கிட்டே சொல்லிக் கொடுக்கவா? படிக்கிற வேலையைப் பாருங்கள். ஓடுங்கள்" என்று விரட்டினாள்.

ஸ்ருதி உடனே பிரண்டு நகர, சரத் சன்னலில் இருந்து பார்வையை நகர்த்த மறுத்தான்.

"அடப் போங்க அக்கா, அடுத்து அந்த ஆன்ட்டி, அவன் மேல் ஏதாவது அபிஷேகம் பண்ணுவாள். அதைப் பார்க்கணுமே எனக்கு. உனக்குதான் பகதியே கிடையாதே. நாங்களாவது தரிசிக்கிறோம்," என்று கண்ணடித்துக் குறும்புடன் அவன் சொல்ல,

"தாத்...தா..." என்று உரக்க குரல் எழுப்பினாள் சூர்யா.

"எட்டப்பி" என்று முணுமுணுத்தபடி கைகளால் சூர்யாவின் ஈர டவலை ஓர் இழு இழுத்து விட்டு ஓடினான் சரத்.



சன்னலை ஒரு சின்ன சிரிப்புடன் மூடியவளின் கண்ணுக்குள், பக்கத்து வீட்டில் குடி வந்துள்ள புதுப் பெண்ணின் பால் முகம் நிறைந்து போயிற்று. மாசு மருவற்ற அந்தக் குழந்தைத் தனமான முகம் அவளுக்கு ரொம்பவே பிடித்துப் போனது.

பரீட்சைக்குப் படித்து முடித்து ரெஸ்ட் எடுக்கும் நேரத்தில் பக்கத்து வீட்டுப் புதுப் பெண்ணிடம் சிநேகிதம் செய்து கொள்ளலாம் போல அவளுக்குத் தோன்ற, நினைத்ததை நடப்புக்கும் கொண்டு வந்து விட்டாள் சூர்யா.

மாடியில் இருந்து இரண்டு மூன்று நாட்கள் "ஹாய்" சொல்லியவளின் நட்பு பிறகு மெல்ல பேச்சாக வளர்ந்தது.

ஒரு நாள் அந்தப் பெண் நவமணி, சூர்யாவை வீட்டுக்கு அழைக்க சூர்யா தாத்தாவிடம் சொல்லிக் கொண்டு கிளம்பினாள்.

ஆனால் பக்கத்து வீட்டில் வரவேற்பறையைப் பார்த்த போது கொஞ்சம் ஏமாற்றமாக இருந்தது.

இரண்டு மூன்று பிளாஸ்டிக் சேர்கள் மட்டுமே இருந்தன. படுக்கை அறையில் செல்லும்படியாக ஒரு சாமான்களும் இல்லை. வீடு, வீடு மாதிரியே தெரியவில்லை. ஆனால் அந்தப் பெண்ணைப் பார்த்தவுடன் மற்ற நினைப்பு மறந்தது. கள்ளங் கபட மற்ற அந்த முகம் ஏதோ ஒரு விதத்தில் சூர்யாவை ஈர்த் விட்டது.

அதுவும் அவள் பிறந்த வீட்டாரை எதிர்த்துக் காத திருமணம் புரிந்த கதையைச் சொன்னபோது சூர்யாவிற்கு பாவமாக இருந்தது.

அப்பா, அம்மா, அண்ணன், தங்கை யாரும் இவ மூஞ்சியிலேயே முழிக்கக் கூடாது என்று சொல்லி விட் களாம். இவளை செத்து விட்டதாக எண்ணி தலை மு விட்டார்களாம்.

முதலில் கஷ்டமாக இருந்தாலும் இப்போது கணவனின் அரவணைப்பில் அவள் நிம்மதியாகவே இருக்கிறாளாம். அதுவும் சூர்யாவின் நட்பு கிடைத்தவுடன் ரொம்ப நிம்மதியாக இருக்கிறதாம். அச்சு, அசல் அவளின் சகோதரியைப் போலவே சூர்யா இருக்கிறாளாம். அடிக்கடி வர வேண்டும் என்று ரொம்பக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்.

நவமணியின் கணவனுக்கு ஏதோ கெமிக்கல் ஃபாக்டரியில் பெரும்பாலும் மாலைதான் ட்யூட்டி இருந்தது. அதனால் மாலை கணவரை அனுப்பியவுடன் சூர்யாவிடம் கதைப் பேச என்று வீட்டு மாடியில் இருந்து சூர்யாவின் அறைப் பக்கம் குரல் கொடுப்பாள். அதே நேரம் சூர்யாவும் படிப்பை முடித்து விட்டு சிறிது நேரம் நவமணியிடம் பேசப் போய் விடுவாள்.

புதிதாகத் திருமணமானப் பெண் என்பதினால் அதிகம் சமையல் கூட அந்தப் பெண் செய்வதில்லை என்று கண்டு சூர்யா தினமும் வீட்டில் செய்து வைத்திருக்கும் பதார்த்தத்தில் தேவையான அளவை அந்தப் பெண்ணுக்குக் கொண்டு போவாள்.

முதலில் மறுத்த நவமணியும் பிறகு ஆசையாக வாங்கிக் கொள்ள இது தொடர்ந்தது.

## 5

அந்த ஞாயிற்றுக்கிழமை,

நந்தகுமாரின் தோழர் வீட்டில் விருந்து என்று குடும்பத்தோடு கிளம்பிக் கொண்டிருந்தார்கள். நந்தகுமாரின் பால்ய



காலத்திலிருந்து இன்று வரை உற்ற சிநேகிதராக இருப்பவர் சிவப்பிரகாசம். அவருடைய மகன் ரோகன். இரண்டு வருடம் வெளிநாட்டில் மேற்படிப்பை முடித்து விட்டு இரண்டு நாள் முன்பு ஊர் திரும்பினான். அதைக் கொண்டாட, மாலை நெருங்கிய சொந்தங்கள், சிநேகிதர்களை அழைத்துப் பார்ட்டி.

பணம் இருந்தால் செலவழிக்க ஒரு வழியும் வேண்டுமே.

ரோஜா வண்ண 'கிரேப்' சேலையில் சின்னச் சின்ன வண்ணத்துப்பூச்சி உருவத்தில் வெள்ளை நிறத்துக் கற்கள் பதிக்கப்பட்டிருந்த சேலையில் ஜொலித்தாள் சூர்யா. முகம் லேசான ஒப்பனையிலும் ரோஜா வண்ண லிப்ஸ்டிக்கிலும் எல்லாரையும் வசீகரித்தது.

''அக்காவைப் போல் நானும் சேலைக் கட்டிட்டு வந்திருந்தால் நல்லாயிருந்திருக்கும். இல்லையாம்மா'' என்று ஸ்ருதி தாயாரிடம் கிசுகிசுக்க, மாதவி சட்டென்று சின்ன மகளைத் திரும்பிப் பார்த்தார்.

மற்றவர்களின் கவனம் தன் மேல் இல்லையே என்ற ஏக்கம் அவளிடம் தோன்றுவதைக் கண்டதும் மாதவிக்குச் சின்னவளின் மனசும் புரிந்து.

பதினெட்டு வயது ஸ்ருதியின் சற்றே பூசினாற் போன்ற உடல் அமைப்பு, இப்பொழுதுதான் சற்று குறைந்து கொடியிடைக்கு வருவதற்கு முயற்சித்தது.

பெண்மையின் பூரிப்பிலும், வசீகரிக்கும் சௌந்தர்யத்திலும் ஒளிர்ந்த அழகில் பாதி கூட அவளிடம் இல்லை என்பது ஒரு குறைதான்.

அதற்குள் ஸ்ருதி செட்டுப் பெண்கள் ஸ்ருதியைத் தங்களுடன் அழைத்துச் சென்று விடவே, மாதவியின் பார்வையு அவள் பின்னே சென்றது.

எதில் போட்டி இருந்தாலும் பரவாயில்லை. ஆனால் கூட பிறந்த சகோதரியின் அழகில் போட்டியிடுவது ஆரோக்கிய மான விஷயம் இல்லையே என்று மாதவிக்கு யோசனையாக இருந்தது.

வரவேற்பாகக் கையில் கிடைத்தப் பழச்சாற்றை அருந்தியபடி கண்களைச் சுழற்றினாள் சூர்யா. அரசியலில், வியாபாரத்தில் பிரபலமான பெரும்புள்ளிகள் நிறையப் பேர் வந்திருந்தார்கள். சற்று தள்ளி விஸ்வநாதரைச் சுற்றி ஒரு கூட்டமே இருந்தது. அவர் எங்கே போனாலும் தனிக் கூட்டம் அமைந்து விடும். அது அவர் ராசி. கூட்டத்திற்கு ஏற்றபடி அவர் தன்னை மாற்றிக் கலந்து விடுவது அவர் பாணி.

சூர்யா செட்டிலும் நிறைய பெண்கள் வந்திருந்தார்கள். பேச்சும், சிரிப்பும் அமர்க்களமாக இருந்தது.

எல்லாரிடமும் இனிய முகத்துடன் பேசிய ரோகன் நிறைய மாறிப் போயிருந்தான். மாநிறத் தோல் வெளுத்துக் கன்னங்கள் கழுக் மொழுக்கென்று செழுமையாகி, முடியை ஏதோ செங்கல் நிறத்துக்கு மாற்றி வெள்ளைக்காரனைப் போல் தோற்றமளித் தான்.

விருந்து மகாபலிபுரத்தில் கடலோரப் பகுதியில் அமைந் திருந்த விசாலமான பங்களாவில் நடந்ததால் எல்லாருக்கும், கடல் காற்றும் அதன் அமைதியும் அலையோசையும் ஒரு வித நிம்மதியைக் கொடுத்தது.

மெத்தென்று கால் வைத்தவுடன் அமுங்கிய புல் தரை, சூர்யாவிற்குச் சுகமாக இருந்தது. அந்தச் சுகத்தில் கூட்டத்தி லிருந்து சற்று விலகிக் கொஞ்ச தூரம் நடந்தாள்.

அந்தி மயங்குகிற சாயங்கால வேளை, சில்லென்ற குளிர் காற்று மனசுக்கு ரம்யமாக இருந்தது. சாமியானா போட்டு அடைக்கப்பட்டிருந்த வாசலையும் கடந்து, விளக்கு வெளிச்



சங்களையும் தாண்டி, மனசு துள்ளியோட, கூட சேர்ந்து துள்ளிய நாவும் ஜதி போட நடந்தாள் சூர்யா.

சிறிது தூரத்தில் கேட்ட மின்மினிப் பூச்சிகளின் ரீங்காரமும் அது மின்னிய ஒளியும் பேரழகாகத் தோன்றியது.

ஒரு மின்மினிப் பூச்சியையாவது தன் கைக்குள் அடக்கிவிட வேண்டும் என்ற ஆவலில் சூர்யா சின்னப் பெண் போல பூச்சிகளின் பின்னால் ஓடினாள்.

அது அவள் பிடிக்குள் சிக்காமல் பறக்க, சூர்யா குறியாய் துரத்த திடீரென்று யாரோ வழிமறித்தாற் போல் நிற்க, சூர்யா பின் வாங்கியபடி நிமிர்ந்தாள்.

அங்கு நின்று கொண்டிருந்தவனைக் கண்டதும் மூச்சடைத்துப் போனது. இதயம் ஒரு கணம் துடிப்பதையே நிறுத்தியது. அரண்டு போனாள் சூர்யா.

'ஆகா... ஆறடி மனிதன். தீவிரவாதி.

## 6

ஐய்யோ இவன் எங்கே இங்கே? இந்தப் பார்ட்டியில் ஏதேனும் அசம்பாவிதம் செய்ய நுழைந்திருக்கிறானா?

என்ன செய்யப் போகிறான்?

வெடிகுண்டு வெடிக்க வைக்கப் போகிறானா?

இல்லை கடத்த.. 'ஆ' அங்கிளையா?

இல்லை... வந்திருக்கிற அரசாங்க முக்கியப் பிரமுகர்களில் யாரையாவது கடத்திப் பணயக் கைதியாக்கப் போகிறானா?

நினைத்ததைச் சாதிக்கும் வரை அவன் அவரை அடைத்து வைப்பானோ? பின் கை, கால், உடம்பு, தலை என்று ஒன்றன் பின் ஒன்றாக வெட்டி அனுப்புவானோ?

ஒற்றை ஆளாகவா இதைச் செய்வான்?

இவன் கூட்டம் வெளியே வண்டியோடு நிற்குமோ?

சட்டைக்குள் ஏதோ துருத்துகிறதே கண்டிப்பாக ஏ.கே. 47 துப்பாக்கியேதான்.

ஒரு நொடியில் அவனைப் பற்றிய இத்தனைச் சிந்தனைகள் அவள் மூளையில் பளிச்சிட்டன.

ஆனால் வழக்கமான அந்த சாயம் போன ஜீன்ஸ், சர்ட்டுக்கு பதில் அவன் அணிந்திருந்த கறுப்பு பேண்ட், வெள்ளை சட்டை அதன் மேல் ஜெர்கின் என்று ஏதோ வேஷம் போட்டுக் கொண்டு வந்திருந்த மாதிரி இருந்தது சூர்யாவிற்கு.

பெரிய அதிகாரியின் வீட்டில் தீவிரவாதி.

சூர்யாவின் மனசுத்தான் இத்தனைப் பேசியதே தவிர, ஆனால் ஆபத்து என்று கத்த நினைத்த வாயில் இருந்து சத்தமே எழும்பவில்லை.

ஒரு விதப் படபடப்புடன், நாலுகால் பாய்ச்சலில் திரும்பி ஓர் எட்டுக் கூட வைத்திருக்க மாட்டாள். அதற்குள் அவன் ஒரே தாவலில் மிகவும் எளிதாக அவளை வளைத்துப் பிடித்தான்.

மிக அருகில் அவன் முகம்.

சூர்யாவிற்கு நெஞ்சே வெளியே குதித்து விடும் போல் படபடத்தது. அவன் தொட்ட இடம் தீப் பற்றி எரிவது போல இருந்தது.

''ச்சீ... என்னை விடு நாசக்காரா ம்... மா...'' என்றபடி முகம் ளிக்கக் கத்தியவளின் வாயைத் தன்னுடைய கைகளினால் டினான் அந்த ஆறடி மனிதன்.



''என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஆசையுடன் நீ கட்டி அணைக்கும் போது, நான் மட்டும் கட்டி அணைக்கக் கூடாதா? இது எந்த ஊர் நியாயம்?'' என்றபடி அவன் அவளை அணைக்க முற்பட, அதே நேரம் அவன் கண்களில் ஆர்வம் மின்னல் வெட்டியது போல மின்னி மறைய சூர்யா அதிர்ந்தாள். அவளின் கைவிரல்கள் லேசாக நடுக்கம் அடைந்தன. ஆனாலும் தன்னை நிதானித்தபடி,

''இப்படி நீ செய்வது பாதகமில்லை. மனிதனாகப் பிறந்து விட்டு மிருகமாக அலைகிறாயே? என்னதான் வேண்டும் உங்கள் கூட்டத்திற்கு? உங்களால் அப்பாவி உயிர்கள் எத்தனை மாய்ந்து போய் இருக்கின்றன. வாழப் பிறந்த நாட்டில் வாழத் தெரியாமல், வெறி பிடித்த மிருகமாக, மனித நேயத்தை மறந்து திரிவது, நாட்டின் வளர்ச்சி, சந்தோஷத்தை எப்படி பாதிக்கிறது என்று...'' மூச்செடுக்காமல், அவனின் கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தபடி சூர்யா பேச,

சட்டென்று வானத்தைப் பார்த்தான் அந்த ஆறடி மனிதன்.

''ஆகா... இன்று பவுர்ணமி. இந்த மாதிரி சமயத்தில் உன்னை வெளியே உலவ விட்ட புத்திசாலிகள் எங்கே?'' என்று உதட்டைப் பற்களால் கடித்தபடிக் கிண்டலாகப் பேச,

ஆ... பைத்தியம்? என்றா சொல்கிறான்? கோபம் எல்லையில்லாமல் பெருகியது சூர்யாவிற்கு.

''நானா பைத்தியம்? இரத்த வெறி கொண்டு அலையும் நீயும் உன் கூட்டமும் அல்லவா பைத்தியம் அ... ப்... பா...'' என்று அவனிடம் திமிறியபடியே சூர்யா படபடக்க, மீண்டும் சூர்யாவின் செவ்விதழ்களை விரல்களினால் மூடினான் அந்த ஆறடி மனிதன்.

அவளின் திமிறலினால் மிக அருகில் அவளின் முகத்தைக் கண்டதும் அவன் முகம் மென்மையானது. உதடு ரசனையில்

ரகசியமாக விரிந்தது. சூர்யாவின் முன் நெற்றியில் விழுந்த கூந்தலைப் பின்னோக்கிச் சரி செய்து... வேறு என்ன செய் திருப்பானோ தெரியாது. சூர்யாவின் நல்ல வேளை, அவனுடைய பாக்கெட்டில் இருந்து ஏதோ அதிர, சட்டென்று இயல்புக்கு மாறி, ஒரு கையால் அவளைப் பிடித்தபடி, மறுகையால் பாக்கெட்டில் இருந்த... 'ஆ'வாக்கி டாக்கி வயர்லெஸ் கருவி, சூர்யா அதிர்ந்தாள்.

தீவிரவாதிகள் உபயோகிப்பது அவன் மெல்லிய குரலில் முணுமுணுத்துப் பேசியதை அவள் இதயம் உள் வாங்கி பிரண்டது... எஸ். 401 ஸ்பீக்கிங் டூ. 207 ஓவர்... மீண்டும் ஓவர்... ஓவர்... ஓவர்... என்றபடி அவன் பேசி முடித்ததும், அவன் முகத்தில் தோன்றிய மும்முரத்தில், சூர்யாவிற்கு ஏதோ பெரிய சதித் திட்டம் இருக்கிறது என்று புரிந்து நெஞ்சம் மேலும் படபடப்பானது. இவனுடன் நட்பாக ஒட்டிப் பேசி, அவர்களின் திட்டம் என்னவென்று அறிய முடியுமா? அல்லது திட்டத்தை நடக்க வைக்காமல் நேரம் கடத்தலாமா?

அவளின் மனதுள் சடக் என்று பெரிய திட்டம் உருவானது. திட்டத்தைப் பற்றி, ஒரு நல்லதா? கெட்டதா? சரியா? தவறா? என்றெல்லாம் ஒரு நொடிகூட யோசிக்காமல், எப்படியாவது தீவிரவாதிக் கும்பலின் சதியை உடைத்தாக வேண்டும் என்ற முடிவோடு, பக்கத்திலேயே நின்றவனிடம் வசீகரமாகச் சிரித்தபடி, வேண்டுமென்றே ஒட்டி நிற்க, அவளின் அழகிய தோற்றத்திலும், புன்னகை தந்த மயக்கத்திலும் அந்த ஆறடி மனிதன் நிலை குலைந்து போனான்.

சில நொடிகள் இருவர் கண்களும் பார்வையால் மோதியபடி ஸ்தம்பித்து நின்றது.

தன்னை அடக்கிக் கொள்ள அவன் உள்ளுக்குள் போரா[illegible]வது அவனின் ஏறி இறங்கிய நெஞ்சப் படபடப்பில் பண்ணவளுக்கு தெரிந்து போனது.



"உங்களை... எனக்கு..." என்று சூர்யா தன் திட்டத்தைத் தொடங்க ஆரம்பிப்பதற்கும்,

"சூர்யா... சூர்யா... எங்கே இருக்கே? சூர்யா..." என்று அழைத்தபடியே சில குரல்கள் ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது.

சட்டென்று நினைவு வந்தவனாக சூர்யாவை உதறியபடி, வேக வேகமாகக் கோட்டை சுவர் பக்கமாக ஓடினான்.

அவன் உதறிய வேகத்தில் தொப் என்று விழுந்து கிடந்த சூர்யாவை நோக்கி வெண் பற்கள் பளிச்சிடச் சிரித்து, கண்கள் சிமிட்டி கோட்டை சுவரின் மறுபக்கம் குதித்து மறைந்ததைக் கண்டு சூர்யாவின் விழி பிதுங்கியது. பின் நொடியில் நிம்மதியடைந்தாள். இங்கே, இந்த சந்தோஷமான சூழ் நிலையைக் கெடுக்காமல், அவசர செய்தியுடன் அவசரமாகச் சென்று விட்டான். ஒரு வேளை குண்டு எதுவும் வைத்து விட்டுப் போய் விட்டானா? என்று வேக வேகமாக அங்குள்ள புதர்களில், செடிகளில் எல்லாம் புரட்டிப் புரட்டிப் பார்த்தாள் சூர்யா.

அதற்குள், அங்கிளும், விஸ்வநாதரும் தனியாக இந்த மாதிரி இருட்டில் வரக்கூடாது என்று சூர்யாவைப் பார்த்தவுடன் குரலில் சிறிது கண்டிப்புடன் சொல்ல,

சூர்யா கைகளைத் தட்டி சகஜமானாள்.

தாத்தாவிடம் மட்டும் நடந்த விஷயத்தைச் சொன்னா லெக்சர்தான் கிடைக்கும். மீண்டும் தகுந்த ஆதாரம் இல்லாம என்னத்தைச் சொல்வது. குறைந்தது அவனையாவது பிடித் வைத்திருக்க வேண்டும்.

ச்... சே... அந்த ஆறடி மனிதன் தான் அவள் மென்கரங்களி சிக்குண்டு விடுவானா?

# 7

அன்று கே.கே. நகரில் சிநேகிதி ஒருத்தியுடன் கம்பைன் ஸ்டடி படித்து முடித்து விட்டு தன்னுடைய ஸ்கூட்டியில் வீடு நோக்கி வந்து கொண்டிருந்தாள். சட்டென்று எதிர்பாராத விதமாக ஒரு பெண் அவள் வண்டியின் முன் விழ, சடன் பிரேக் போட்டு டயர் கிரீச்சிட வண்டியை நிப்பாட்ட வேண்டிய தாயிற்று.

எரிச்சலில் அந்தப் பெண்ணைத் திட்டுவதற்காக சூர்யா வாயைத் திறக்க, அந்தப் பெண் கண்கள் கலங்க,

''ப்ளீஸ் என்னைக் காப்பாற்றுங்கள். ஒருத்தன் என்னைத் துரத்திக் கொண்டு வருகிறான். ப்ளீஸ் காப்பாற்றுங்கள்'' என்று கெஞ்ச,

எதற்காக இந்த பயம்? யாரைக் கண்டு இந்த பயம் என்று அந்தப் பெண் ஓடி வந்த திசையில் திரும்பிப் பார்க்க, சிறிது தொலைவில் நாலுகால் பாய்ச்சலில் ஓடி வரும் அந்த ஆறடி மனிதனைக் கண்டதும் வியர்த்துப் போனாள். நொடியில் முடிவு செய்து ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து, அந்தப் பெண்ணை ...ம் ஏறிக் கொள்ளச் செய்து காற்றில் சிட்டாகப் பறந்து ...ட்டாள் சூர்யா.

இரண்டு மூன்று திருப்பங்கள் திரும்பிய பிறகு இனி அந்தக் ...வனால் எந்தவிதப் பாதிப்பும் இருக்கப் போவதில்லை ...று அறிந்தவுடன்,

''யார் அவன்? எதற்காகத் துரத்தினான்?'' என்று சிரத்தை ... விசாரித்தாள்.



சில நொடிகள் அந்தப் பக்கத்தில் இருந்து எந்த சப்தத்தையும் காணும். பிறகு,

''என் பெண்மையைக் காப்பாற்றித் தந்திருக்கிறீர்கள்'' என்று வார்த்தைகளில் நடுக்கத்துடன் சொல்லி பெருமூச்செறிந் தாள். பிறகு தொடர்ந்து,

''நீங்கள் செய்த உதவியை இந்த உயிர் உள்ள வரை மறக்க மாட்டேன்,'' என்றாள்.

''எத்தனைக் கொடூரமானவன்'' என்று உணர்ச்சி வசப்பட்டு சொல்லியபடி ஒரு திருப்பத்தில் திருப்பியவளின் வண்டி நிலை தடுமாறிச் சரிய, சூர்யாவுக்கும் பேலன்ஸ் தழுவ, இரு பெண்களும் கீழே விழுந்தனர்.

வண்டியை மெதுவாக ஓட்டியதால் இருவருக்கும் சின்ன சிராய்ப்புதான்.

விழுந்த அந்தப் பெண் நிதானித்து எழும்பும் முன், சர்... என்று ஓர் அம்பாசிடர் கார் வந்து நிற்க, அதிலிருந்து இறங்கிய வாட்ட சாட்டமான இருவர் குண்டு கட்டாக அந்தப் பெண்ணைத் திமிறத் திமிற நொடியில் வண்டியில் ஏற்றிப் பறந்தார்கள்.

அந்த வண்டியின் முன் பக்கத்தில் உட்கார்ந்திருந்தவனின் முகம் ஒரு முறை சூர்யாவைத் திரும்பிப் பார்த்துக் கண்ணடிக்க, சூர்யாவிற்கு திக் என்றது.

அந்த ஆறடி மனித தீவிரவாதி. எங்கு பார்த்தாலும் சுற்றிச் சுற்றி அவனுடைய அட்டகாசமே இருக்கிறதே! கேட் பாரில்லையா? என்ற கேள்வி பெரிதாக அவளைக் குடைந்தது.

கடைசியில் அந்தப் பெண் பயந்தது நடந்து விட்டதே! பட்டப் பகலில் என்ன அநியாயம் இது.

கொஞ்சம் ஆள் நடமாட்டம் இல்லாத இடம் என்பதால் வினாடிக்குள் நடந்து முடிந்து விட்ட நிகழ்ச்சி, மற்றவர்கள் கவனத்திற்கு ஆளாகாமல் தப்பித்தது.

சூர்யாவிற்குக் கோபம் புடைத்துக் கொண்டு கிளம்பியது. என்ன திமிர்? என்ன அட்டகாசம்? என்ன கொடுமை? நினைக்க நினைக்க நெஞ்சு ஆறவேயில்லை.

மனசு செய்ய வேண்டிய முக்கியமான வேலையை அறிவுறுத்த அவள் வண்டி அருகிலிருந்த காவல் நிலையத்தை நோக்கிச் சென்றது.

## 8

''இதற்கு முன் அவனைப் பார்த்திருக்கிறீர்களா?''

முதல் முறையாகப் போலீஸ் ஸ்டேஷனில் கால் வைப்பது அவளுக்கு எந்த விதமான மாறுபட்ட உணர்வையும் கொடுக்கவில்லை. மக்கள் நலனுக்காக, பாதுகாப்பிற்காக அமைக்கப் பட்டிருக்கும் அமைப்பு. அதனால் எந்தத் தடுமாற்றமும் இன்றி உள்ளே சென்றாள்.

''இதற்கு முன்பு ஓரிரு முறை பார்த்திருக்கிறேன். ஒரு நாள் சந்தேகப்படும் படியாக திருட்டுத் தனமாக ஒரு வீட்டை போட்டோ எடுத்துக் கொண்டிருந்தான்.''

''எப்பொழுதாவது கூப்பிட்டால் வந்து அடையாளம் காட்டுவீர்களா?''

''கண்டிப்பாக, சீக்கிரம் கண்டுபிடித்து விடுவீர்களா இன்ஸ்பெக்டர். அந்தப் பெண் பாவம், ரொம்பவும் பயந்து போய் இருந்தது. ஜனநாயக நாட்டில் இந்த மாதிரி கொடுமைகள் எப்போது முடிவுக்கு வருமோ?''



''தைரியமாக, நாட்டில் நடக்கும் கொடுமைகளை, சீர் கேட்டை, உங்களைப் போல ஒவ்வொருவரும், யாருக்கு வந்த வினையோ என்ற எண்ணம் கொள்ளாமல் விழிப்புணர்வுடன் செயல்பட்டால் கொடுமைகளுக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டு விடும்'' என்று முடித்தார் இன்ஸ்பெக்டர்.

## 9

வீட்டிற்கு வந்த பின்பும் சூர்யாவின் மனசு நிம்மதி அடையாமல் அலைக்கழிந்தது.

''என்ன? சூர்யா குட்டிக்கு மூக்கு மேலே கோபம் தாண்டவ மாடுது?'' என்று வீட்டில் இருந்த நந்தகுமார் கதவைத் திறக்கையிலேயே கேட்க,

சூர்யா சடசடவென்று நடந்ததைக் கொட்டி விட்டாள்.

''கம்ப்ளைண்ட்டே பண்ணிட்டியா சூர்யா?'' புருவம் மேலே உயர ஆச்சர்யமாக கேட்க,

''பின்னே தப்புக்கண்ட இடத்தில் தட்டிக் கேட்கணும்னு நீங்கத்தானேப்பா சொல்லிக் கொடுத்தீங்க. அந்தப் பெண் ரொம்ப பாவம்ப்பா. அன்றைக்கே நான் சொன்னேன். அந்த ஆள் கண்ணைப் பார்த்தாலே சரியில்லை. அங்கும் இங்கும் கண்கள் நாலு பக்கமும் சுழல்கின்ற வேகமே ஏதோ தவறு செய்கிற அவசரம் என்று புரியத் தானே செய்கிறது'' சூர்யா வருத்தத்துடன் பேச,

அதற்குள் கிரிக்கெட் கோட்சிங் முடிந்து பள்ளியில் இருந்து லேட்டாக வந்த சரத் தோளில் தொங்கிய புத்தகப் பையை

தொப்பென்று தரையில் வீசினான். கையிலிருந்த கிரிக்கெட் பேட்டை பத்திரமாக சோபாவில் வைத்தான்.

"சரஸ்வதியை அப்படித் தூக்கி எறியாதே என்று அவனிடம் எத்தனையோ முறை சொல்லியாகி விட்டது கேட்கிறானா என்று பாருங்களேன்" என்று சரத்தின் புத்தகப் பையைக் கையில் எடுத்தபடி நந்தகுமாரிடம் மாதவி புகார் கொடுக்க,

"தெண்டுல்கரே அவன் தெய்வம். சரியான கிரிக்கெட் பைத்தியம்" என்று சூர்யாவும் எடுத்துக் கொடுத்தாள்.

"நாட்டின் நலம் விரும்பி அக்காவின் இன்றைய சாதனைகள் என்னவோ?" என்று அப்பாவும், அக்காவும் பேசிக் கொண்டிருந்த தோரணையில் வினவினான் சரத்.

"இன்றைய சாதனை, நம் குடும்பத்தில் முதல் முதலாக போலீஸ் ஸ்டேஷன் வாசலை மிதித்த பெண் என்ற பெருமை சாதனையை என் பேத்தி பெற்று விட்டாள்" என்று கொஞ்சம் பரிகாசமாகவும் கொஞ்சம் எரிச்சலாகவும் சொல்லியபடி தன் அறையில் இருந்து வெளியே வந்தார் விஸ்வநாதர்.

சூர்யாவின் பேச்சை அங்கிருந்து முழுமையாகக் கேட்டு இருப்பார் என்று அவரின் பேச்சிலிருந்து புரிந்ததும் சூர்யா உதட்டைக் கடித்தாள்.

ஆனால் பதிலும் ரெடியாக வைத்திருந்தாள்.

"போலீஸ் ஸ்டேஷனுக்குப் பொம்பளப் புள்ள நீ போற இடமா?"

"போனா என்ன தப்பு தாத்தா? வீட்டிலே தம்பி தப்பு பண்ணா, நான் தட்டிக் கேட்க மாட்டேனா? அவன் கேட்கலைன்னா, உங்ககிட்டே அவனைப் பற்றி புகார் செய்து தண்டனை வாங்கிக் கொடுத்து வழிக்குக் கொண்டு வர மாட்டேனா? அப்பத்தானே தம்பி நல்லாயிருப்பான். நம்ம வீடு



நல்லாயிருக்கும். இது போல நாடும் நம்மது தானே தாத்தா. எது நடந்தாலும் கண்ணைப் பொத்திக்கோ, நான் நல்லா இருந்தாப் போதும்ன்னு இருந்துட்டா, வருங்காலத்தில் நாமும் நல்லா இருக்க முடியாது தாத்தா. ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கறீங்க."

"உனக்குக் கையிலே ஒரு மைக் மட்டும் இல்லாத குறை" என்று ஒரே வரியில் ஒரு மாதிரியான பார்வையில் விஸ்வநாதன் சொல்ல...

"அக்கா நான் சொல்றேன் கேட்டுக்கோ... வீரமான ஆளைத் தான் கல்யாணம் பண்ணிப்பேன்னு சொன்னேயில்ல, போலீஸ்காரங்களோடு, தீவிரவாதிகள் தான் இப்பவெல் லாம் நெஞ்சை நிமிர்த்தி வீரமா இருக்காங்க. பேசாமல் ஏதாவது தீவிரவாதியைப் பார்த்துக் கல்யாணம் பண் ணிக்கோக்கா..." என்று சொல்லிவிட்டு, பின்னே அடிக்கத் துரத்தியபடி வந்த அக்காவின் கைப்பிடிக்குள் சிக்காமல் நாலுகால் பாய்ச்சலில் பெருஞ்சிரிப்புடன் தன்னறைக்குள் ஓடி ஒளிந்தான் சரத்.

விஸ்வநாதர் திரும்பவும் சூர்யாவை அழைத்துத் தன் அறையில் இருத்தி, சுமார் ஒரு மணிநேரம் அட்வைஸ் செய்தார்.

இனிமேல் எந்த நிலையில் அவனைப் பார்த்தாலும் போலீசுக்கு அவள் போகக் கூடாதாம், விஸ்வநாதரிடம் சொன்னால் மேற்கொண்டு நடவடிக்கை மறைமுகமாக எடுக்க முயற்சிப்பாராம். பெண் அவளுக்கு இந்த மாதிரியா சி.ஐ.டி. புத்தி, குருட்டு தைரியம் எல்லாம் எதிர்காலத்தைச் சிதைத்து விடுமாம். அப்படியும் விஸ்வநாதரின் சொல்லையும் மீறி மீண்டும் ஒரு நாள் அந்த போலீஸ் ஸ்டேஷனில் விசாரித்தாள்.

"நீங்க சொன்ன மாதிரி பெண்ணைக் காணவில்லை என்று எந்தக் கம்ப்ளெய்ண்ட்டும் இதுவரை வரவில்லையம்மா. ஒரு

வேளை ஏதாவது வீட்டுப் பிரச்சினையாகக் கூட இருக்கலாம். இந்தக் காலத்தில் லவ்வர்ஸ் பிரச்சினை, புருஷன் பொண்டாட்டி விவகாரம் என்றுதான் வீதிக்கு வீதி நாறுகிறதே. இன்னைக்கு அடிச்சிப்பாங்க, நாளைக்கு சேர்ந்துப்பாங்க. எனக்கு என்னவோ அதுதானோ என்று சந்தேகமாக இருக்கு. இல்லை என்றால் கம்ப்ளெய்ண்ட் வராமல் போகாது.

சூர்யாவிற்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பதில் ஒன்றும் பேசாமல் திரும்பி வந்து விட்டாள்.

மனுஷியாய் தான் கொடுத்த கம்ப்ளெய்ண்ட்டைத் தொடக்கமாக எடுத்துக் கொள்ளாமல், அந்தப் பெண்ணைச் சார்ந்தவர்கள் தேடவில்லையாம். என்ன கண் துடைப்பு விவகாரமோ?

ஒரு வேளை சினிமாவில் வருவது போல இந்த போலீஸ்காரன் கைக்கூலியாக இருப்பானோ?

ச்சே... யார் எக்கேடும் கெட்டுப் போகட்டும்.

விட்டுத் தொலைக்க வேண்டியதுதான். நாட்டின் பிரஜையாக அவளால் முடிந்த மட்டும் அந்த ஆறடி மனிதனைப் பிடித்துக் கொடுக்க முயற்சித்து விட்டாள்.

யாரும் அவள் சொல்வதை நம்புவதற்கும் வழியில்லை. சூர்யாவிற்கு எரிச்சலாக இருந்தது.

## 10

இடைப்பட்ட காலத்தில் சூர்யாவின் பரீட்சையும் தொடங்கி முடிந்தது.



மாலை நேரங்களில், பக்கத்து வீட்டு நவமணியும் இவளுமாக வாக்கிங், ஷாப்பிங் என்று பக்கத்தில் உள்ள இடங்களுக்கும் செல்லத் தொடங்கினார்கள்.

சூர்யாவிற்குச் சில நேரங்களில் ரொம்பவும் அதிசயமாக இருக்கும். இப்படியும் அநியாயமாக நல்ல மனிதர்கள் உலகத்தில் இருக்கிறார்களே என்பதுதான்.

நவமணி புன்சிரிப்பான பேச்சில் இருந்து ஒரு போதும் பின் வாங்க மாட்டாள். சுபாவமும் வெகு மென்மையான சுபாவம். வெகு சில சமயம் சூர்யாவிற்கு நவமணி பேசும் பேச்சுக்கள் இயற்கையாக இருந்த மாதிரி தோன்றாது. வீட்டில் பலமுறை பயிற்சி செய்து விட்டு வந்து பேசுவது போல் தோன்றும். அப்படி தோன்றியதற்காக சூர்யா தன்னையே கடிந்து கொள்வாள்.

ஒரு நாள் சாய்பாபா பஜன் என்று சொல்லி ஈக்காட்டுத் தாங்கல் தாண்டி ஒரு வீட்டிற்கு நவமணி சூர்யாவை அழைத்துச் சென்றாள்.

சாய்பாபா பஜன் என்றால் பொதுவாகவே சூர்யாவிற்கு ஆர்வம் உண்டு. அதனால் மிகுந்த ஆசையுடன் அவளுடன் சென்றாள்.

ஆண்களும் பெண்களுமாகப் பத்து பன்னிரண்டு பேர்கள் தான் இருந்தார்கள்.

மூன்று நான்கு பாடல்கள் பாடினார்கள். பின்பு இவளுக்குப் புரியாத விதத்தில் பேச்சுக்கள் நடந்தது. அவர்கள் நவமணியின் கணவனின் கம்பெனியில் வேலை பார்ப்பவர்கள். குடும்பம் என்பதால் அவர்களுக்குள் ஒருவரை ஒருவர் பழக்கம் இருந்தது. சூர்யாதான் தனி மனுஷியாக இருந்தாள். ஆனாலும் நவமணி நிறைய சமயங்களில் சூர்யாவை தன் பக்கத்திலேயே இருத்திக் கொண்டாள்.

இனி இது போல நவமணியுடன் வரக்கூடாது என்று சூர்யா மனதில் நினைத்துக் கொண்டாள். பஜன் என்று பொய் சொல்லி ஏதோ திருட்டுத் தனம் செய்கிறார்களா? என்ற சந்தேகப் பொறி கடுகளவு அவள் நெஞ்சில் தோன்றியது. அப்போதுதான், பஜன் என்று தினேஷ் என்ற ஒருவனை நவமணி அறிமுகம் செய்து வைத்தாள். அதன் பிறகு நவமணியைப் பார்க்க அவள் வீட்டிற்கு சூர்யா போகும் போதெல்லாம் அவன் இருந்தான்.

சூர்யாவிடம் தேவையின்றி அதிகம் பேசினான். பேச்சில் பெரும்பகுதி அவனின் பெருமைகளைப் பற்றியே இருந்தது. நவமணியின் கணவனின் கல்லூரித் தோழனாம். இப்போது எக்ஸ்போர்ட் கம்பெனி தொடங்கி பெரிய அளவில் லாபகரமாகத் தொழில் செய்து கொண்டிருக்கிறானாம்.

நவமணியும் கூட சேர்ந்து பாதி நேரம் அவனைப் பற்றியே புகழாரம் சூட்ட, சூர்யாவிற்கு எங்கோ, எதிலோ பெரிய தப்பு இருப்பது புரிந்தது.

முதலில் சிநேகமாகத் தெரிந்த தினேஷின் பார்வையும் பேச்சும் மாறிய விதத்தில் சூர்யா நவமணியின் வீட்டிற்குப் போவதைக் குறைத்தாள்.

இரண்டு மூன்று முறை சூர்யா பக்கத்தில் கடைகளுக்குப் போய் விட்டு வரும் போது கூடவே வந்து பேச்சுக் கொடுத்தான் தினேஷ். சூர்யாவிற்கு ஒன்றும் ரசிக்கவேயில்லை.

வழக்கத்திற்கு விரோதமாக, நவமணி அடிக்கடி இவள் வீட்டிற்கு வந்து, தினேஷ் சூர்யாவை விரும்புகிறானாம். மிக மிக நல்லவன் என்ற தூது வர சூர்யாவிற்கு மனசு சக் என்று விழித்துக் கொண்டது.

இதற்கெல்லாம் ஆள் தானில்லை என்று நச் என்று நவமணிக்குப் பதில் கொடுத்தாள். அவள் வீடு போவதை முற்றிலுமாக தவிர்த்தாள்.



இந்தக் காலத்தில் சிநேகம் செய்யும் முன் பலவற்றையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அனுபவம் இல்லாத காரணத்தால் சூர்யாவிற்கு தெரியவில்லை. ஆனால் புத்திசாலி என்பதால் கொஞ்சம் பேச்சு மாறிய மாற்றத்திலேயே வித்தியாசம் கண்டு சூர்யா, நவமணியை முற்றிலுமாகத் தவிர்த்தாள்.

அப்படியும் அந்த தினேஷ் அங்கே, இங்கே வழிகளில் பார்க்கும்போது பேசுவதைக் குறைக்கவில்லை.



## 11

சூர்யாவிற்கு அன்று மனசே சரியில்லை. அடிக்கடி பக்கத்து வீட்டு நவமணி நினைப்பாகவே இருந்தது.

அந்தப் பெண்ணிடம் பழகியது தவறா? சரியா? என்றே தீர்மானிக்க முடியவில்லை. தினேஷின் காதலை ஏற்றுக் கொள்ள நவமணி சூர்யாவை மறைமுகமாக வற்புறுத்தியது போன்ற ஒரு தோற்றத்தை மனதில் உணர்ந்தாள்.

ஏன்?

விடை கிடைக்கவில்லை. சூர்யாவிற்குக் கண்டதும் காதல் வருமா? பழகிய வெகு சில நாட்களில் இப்படி யாராவது கேட்பார்களா?

அவளின் நெஞ்சில் பல சிந்தனைகள் குழம்பியது.

நல்ல வேளையாக பரீட்சை முடிந்த கையோடு, மாதவி சூர்யாவை பேக்கிங் படிக்க வென்று சமையல் வகுப்பில்

சேர்த்து விட்டிருந்தாள். அதனால் சூர்யாவின் நிலைவும் ரொம்பத் தெறவில்லை.

அன்றும் ஓர் அப் சைட்டவுன் கேக் செய்ய வேண்டிய பொருட்களை வாங்க புட் வேர்ல்டு டிபார்ட்மெண்ட் கடைக்குக் கிளம்பினாள்.

ஸ்கூட்டியை பார்க் செய்யும்போதே கவனித்தாள்.

அவன் - அந்த ஆறடி மனிதன்.

அவளையே கவனித்தவாறு பார்க்கிங் வழியின் பக்கத்திலேயே நின்றான்.

தொடர்ந்து வந்திருப்பானோ?

இல்லை தற்செயல் சந்திப்பா?

சந்தேகமாக இருந்தது சூர்யாவிற்கு.

கடந்த பத்துப் பதினைந்து நாட்களாக, அவன் நினைவு, படிப்பு, பரீட்சை என்பதில் ஏறத்தாழ தொலைந்து போயிருந்தது.

கடையில் அவளுக்குத் தேவையான டின் பைனாப்பிள் ப்ரஸ் கிரீம், பட்டர் என்று வாங்கிக் கொண்டு கூடையை கவுண்ட்டர் பக்கமாக எடுத்துச் செல்ல எத்தனிக்கையில், அவனும் ஒரு கூடையுடன் பக்கவாட்டுப் பக்கத்திலிருந்து பிரசன்னமானான்.

ஆனால் அவன் பேசிய பேச்சில் சூர்யாவிற்கு ரத்தம் சூடாயிற்று.

''அட'' என்று வேண்டுமென்றே ஆச்சர்யப்பட்டான். பின்,

''அடிக்கடி என்னையே தொடர்ந்து வருகிறாயே இந்த சினிமா, எல்லாம் பார்த்து, வித்தியாசமான முறையில் என்னை லவ் எதுவும் செய்கிறாயா? எனக்கு இதிலெல்லாம் அவ்வளவு



சாமர்த்தியம் போதாது. எனக்கு நேரிடையாகப் பதிலைச் சொல்கிறாயா?'' என்று வெகு வக்கணையாகக் கண்களில் தீவிரத்தைக் கொண்டு வந்து கேட்டாலும் உதடு பரிகாசத்தில் வளைந்திருந்தது.

சூர்யாவிற்கு கோபத்தில் முகம் சிவந்து போயிற்று.

என்னப் பேச்சு பேசுகிறான். இவனுடைய குற்ற நெஞ்சு குறுகுறுக்கவே செய்யாதா? பதில் கொடுக்காமலா போவது?

''கன்னம் பழுத்து விடும் ஜாக்கிரதை'' என்று இறுகின குரலில் சூர்யா சொல்ல,

''எப்படி? இச்... இச்... என்று முத்தமிட்டே என் கன்னத்தை பழுக்க வைக்க விடுவாயோ?'' அவன் கண்களில் தாண்டவமாடிய ரசனையைக் கண்டு சூர்யாவிற்கு உடம்பெல்லாம் பற்றி எரிவது போல் இருந்தது.

''ராஸ்கல்... என்ன தைரியம் உனக்கு?''

''ராஸ்கல் இல்லையம்மா என் பெயர்... நான்...'' என்றவன், ''நோ... முதலில் உன் பெயர் சொல்'' என்று சூர்யாவின் கோபத்தை உணராத தினுசில் வேண்டுமென்றே பேச்சை வளர்க்க,

சூர்யாவிற்குள் எழுந்த ஆத்திரத்தில் வார்த்தைகள் கன்னா பின்னா என்று உதட்டில் துள்ள,

''நாயே...'' என்று முறைப்புடன் சொன்னபடி அவள் அந்த இடத்திலிருந்து நகர முயல, சட்டென்று அவளின் கையை அழுத்தத்துடன் பிடித்தான்.

''அந்தப் பெயர் உனக்குப் பொருத்தமாகவே இல்லையே சூர்யா என்று பொருத்தமான பெயர்தான் வைத்திருக்கிறாயே'' என்று நிறுத்தியவன்,

''நெருப்புத்தான் இல்லையா நீ'' என்று ஒற்றை புருவத்தை உயர்த்தி மெல்லப் பேசினாலும் சொற்கள் தடுமாற்றம் இல்லாமல் தெளிவாக - உறுதியாக இருந்தன.

இவன் எப்படி என் பெயரைத் தெரிந்து கொண்டான் என்று திடுக்குற்று சூர்யா அவன் முகத்தை நோக்க,

அவன் முகத்தில் அதுவரை தெரிந்த பாவங்கள் மாற்ற மடைந்து தீவிரம் குடி புகுந்தது.

''யார் வலையிலும் மாட்டி விடாமல் நெருப்பாகவே எப்பொழுதும் இரு. சற்று தூங்கிக் கொண்டிருக்கிற மூளையைத் தட்டி எழுப்பி அதற்கும் வேலை கொடு'' என்று நேர் பார்வையாக அவள் கண்களை ஊடுருவுவதைப் போல் பார்த்துப் பேச, அவன் பேசிய பேச்சின் அர்த்தம் புரிவதற்குள்ளே மாயமாய் மறைந்து விட்டிருந்தான்.

என்ன சொல்கிறான்? யாரைப் பற்றிச் சொல்கிறான்? இவன் யார் எச்சரிக்கை விட? மூளையை உபயோகிக்க வேண்டுமா?

உத்தம புத்திரன்தான். நாட்டிற்காக அவதரித்த புண்ணிய ஆத்மா மாதிரி குற்றமே செய்யாத மாதிரி என்ன தைரியமாக நெஞ்சை நிமிர்த்திப் பேசுகிறான்.

குற்றம் செய்பவர்களால் இப்படி நெஞ்சை நிமிர்த்த முடியுமா?

கண்ணோடு கண் நோக்கி எச்சரிக்கை விடத்தான் முடியுமா?

யார் வலையில் இவள் மாட்டிக் கொள்ளப் போகிறாளாம்?

சட்டென்று பொறி தட்டியது சூர்யாவிற்கு.

தினேஷ்.

அடக்கடவுளே. இவனை நான் வேவு பார்க்கப் போய், அவன் என்னையா வேவு பார்க்கிறான்?

அதுவும் தப்பு அர்த்தத்தில்.



ஏற்கெனவே அந்த தினேஷிடம் பேசுவதை நிறுத்தியிருந்தாள். அப்படியும் வழியில் எங்கேயாவது பார்க்க நேர்ந்தால், முகத்தைத் திருப்பிக் கொண்டு போகவும் வழியில்லை. அவனின் எண்ணத்தை ஊக்குவிக்காத வகையில் மேலோட்டமாகப் பேசி நகர்ந்து விடுவாள்.

ஒரு வேளை... அந்த தினேஷ் ஊரெல்லாம் தன்னைத் தன் காதலி என்று சொல்லிக் கொண்டு திரிகிறானா?

தலை சுற்றியது சூர்யாவிற்கு.

## 12

மறுநாள்,

சிலுசிலுவென்று குளிர்ந்த மழைக்காற்று அடித்துக் கொண்டிருக்கவே, சூர்யா அதன் குளிரில் உடல் சிலிர்த்தாள்.

படிப்பு என்பது முடிவில்லாத விஷயம் ஆகிவிட்டது. என்ஜினியரிங் இறுதி வருடம் பரீட்சை முடிந்து விட்டாலும், அடுத்தக் கட்டமான வேலைக்கு என்று மீண்டும் ரிட்டர்ன் எக்ஸாம் இண்டர்வியூ என்று தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

சூர்யாவும் நேரம் கிடைக்கும் போதெல்லாம் குறிப்புகள் எடுத்துப் படிக்க ஆரம்பித்திருந்தாள்.

ஆனால் திடீரென்று இருட்டிக் கொண்டு வந்த மழைக் கால மத்தியான வேளை ஒரு விதமான இளக்கத்தையும், கிறக் கத்தையும் கொடுக்க, கையில் பிரித்து வைத்துப் படித்துக்

கொண்டிருந்த புத்தகத்தை மேஜையில் வைத்து விட்டு, தன்னுடைய மாடி அறை சன்னலில் இருந்து வெளியே எட்டிப் பார்த்தான்.

நல்ல காற்று வேறு.

இலைகளைச் சிலுப்பிக் கொண்டு கர்வமாக ஆடிக் கொண்டிருந்த மரக்கிளைகளின் சத்தம் இரைச்சலாக இருந்தது. இவன் மரங்களின் ஆட்டத்தை ரசித்துக் கொண்டிருந்த அதே நேரம் அந்த ஆறடி மனிதன் பக்கத்து வீட்டு நவமணியின் வீட்டில் இருந்து வெளி வந்தான்.

சூர்யாவிற்குத் தெரிந்த வரையில், நவமணி மத்தியானம் தூங்கும் பழக்கம் உள்ளவள்.

இந்த நேரத்தில் இந்த திருட்டு தீவிரவாதி அங்கே என்ன செய்கிறான்? திருட்டுத் தனமாகவே நுழைந்தானா? என்னவோ?

கீழே இறங்கி நவமணியிடம் அவன் வந்ததன் விவரம் அறியலாமா? என்று ஒரு வேகம் கிளம்பியது.

சட் என்று தன்னை அடக்கினாள். நவமணி வீட்டுப் பக்கம் எக்காரணத்தைக் கொண்டும் போகவே கூடாது என்று மனசுக்குள் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்திருந்தாள். அதை எதற்கு மீறுவானேன்?

இவனும் திருட்டுத் தனமாக வந்ததாகவே தெரியவில்லை. நிமிர்ந்த நடையும், நேர் கொண்ட பார்வையுமாக, அதே உத்தம புத்திரன் போஸ்ஸில் விரைப்பாக நடந்து கொண்டு தெருவைக் கடந்து போனான்.

சூர்யா கூர்ந்து நோக்குகையில் அவன் பூனையடியாகத்தான் முதலில் அந்த வீட்டில் இருந்து வெளியே வந்ததாகத் தான் தோன்றியது.

ஆகவே உரிமையாளர்களின் அனுமதியின்றித்தான் பிரவேசித்திருப்பான்,



ச்... சே... யார் இது ஆறடி மனிதன் சதா மர்மமான செய்கைகளைச் செய்து இவளைக் குழப்புகிறவன். இவனைப் பற்றி ஆராய்ச்சியின் முடிவில் தனக்குப் பைத்தியம் பிடிக்கத் தான் போகிறது. ஆனாலும் இவன் சரியில்லை.

சிந்தனைகள் என்ன தடுத்தாலும் கேளாமல் அவன் புறமே பறந்தன.

பக்கத்தில் வந்து அசந்து சோகமாக நாற்காலியில் விழுந்த தம்பி சரத்தைக் கண்டதும் சூர்யாவின் சிந்தனைகள் கலைந்தது.

சரத்தின் சோகமான முகத்தைக் கண்டதும் ஆச்சரியமாக இருந்தது. சதா கிண்டல் கேலி என்று உலா வரும் தம்பிக்கு சீரியஸ்னஸே கிடையாது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

''என்னடா விஷயம்? ஸ்கூல்லே வம்பு பண்ணி மாட்டிக் கிட்டியா? அதுக்கெல்லாம் நீ அசற ஆளில்லையே? என்னடா ஆச்சு?''

''அக்... கா..'' என்று ஆரம்பித்த தம்பியின் குரல் திக்கியதில் சூர்யாவிற்கு ஏதோ விஷயம் இருக்கிறது என்று புரிந்தது.

''அக்கா... ஸ்ருதி மாடியில் அடிக்கடி போறா. இரண்டு, மூன்று நாளா நான் கவனிக்கிறேன். இவள் போற அதே நேரம் பக்கத்து வீட்டு மாடியில் இன்னொரு ஆளும் வரான். இரண்டு பேரும் ரொம்ப நேரம் சிரிச்சுச் சிரிச்சுப் பேசறாங்க. எனக்கு பயம்மா இருக்கு. ஸ்ருதி தப்பு பண்ணறாளோன்னு எனக்குச் சந்தேகமா இருக்குக்கா.'' என்ற சின்னதம்பியின் விவரமான அதிர்ச்சியான செய்தியில் தலை சுற்றியது சூர்யாவிற்கு. சமாளித்துக் கொண்டு,

''தாத்தாவிடமும், அப்பாவிடமும் இந்த விஷயத்தைப் பற்றி இப்போதைக்கு மூச்சு விடாதே சரத். அடியில் கொன்று

பற்றி எனக்கு ஓரளவுக்குத் தெரியும். உன் இஷ்டத்திற்கு எல்லாம் அவ்வளவு சீக்கிரம் வளையாது'' இது நவமணி.

''அதுவும் இந்த நிலையில் நாம் லேசாகக் காலை மாற்றிப் போட்டு விட்டாலும் நம் தலைவர் நமக்களித்துள்ள வேலை, இத்தனை நாட்களாக அதற்காக நாம் போட்டத் திட்டம் நகர்த்திய காய்கள் அத்தனையும் சொதப்பல். யோசித்துப் பார் தினேஷ். உருப்படியாக ஒன்றும் செய்யாமல் கூண்டோடு கைலாசம் போக நான் தயாராகயில்லை.''

இது யார் குரல்.

''ஏற்கெனவே சட் சட் என்று நம்மவர்களைச் சேர்ந்தவர்கள் சில நாட்களாகவே காணாமல் போகிறார்கள். போலீஸ் பிடித்திருந்தால் இந்நேரம் பேப்பரில் பக்கம் பக்கமாக எழுதித் தள்ளியிருப்பார்களே? என்ன நேர்ந்தது என்றே புரியவில்லை. குறைந்த பட்சம், தலைவர் சொன்ன அந்த முக்கியமான பத்து இடங்களில் குண்டு வைப்பு வேலையை வெற்றிகரமாக முடித்து விட்டு இந்த ஏரியாவை விட்டு சீக்கிரத்தில் வெளியேறி விடுவது நல்லது என்று என் மனம் சொல்கிறது'' என்று இன்னொருவனின் குரல் கேட்டது.

அச்சு பிரளாமல் பிரள வைக்கும் வார்த்தைகளைக் கேட்ட சூர்யாவிற்கு உடம்பெல்லாம் வியர்த்துக் கொட்டத் தொடங்கியது. கொஞ்சம் கூட நினைத்தே பார்க்காத விஷயம். அது வரை இழுத்துப் பிடித்திருந்த மூச்சை மெல்ல வெளியிட்டவள் படபடக்கும் நெஞ்சோடு வந்த சுவடே தெரியாமல் வெளியேறினாள்.

அந்த ஆறடி மனிதன் நவமணியின் வீட்டிற்கு வந்து போன காரணமும் புரிந்து போயிற்று. எல்லாம் ஒரே சேற்றில் ஊறிய சாக்கடைகள்.



## 14

சூர்யா வீட்டிற்குள் மூச்சிறைக்க ஓடி வந்து, விஸ்வநாதரிடமும், நந்தகுமாரிடமும் ஸ்ருதியைப் பற்றிய செய்தியை விடுத்து, தான் கேட்ட திடுக்கிடும் ஆபத்தான செய்தியைப் படபடக்கும் இதயத்தோடு சொல்லி முடிக்க,

விஸ்வநாதர் கை நடுங்கலோடு ஓடி மேல் சட்டையை எடுத்து போட்டுக் கொண்டே வாசலை நோக்கி ஓட,

அன்று விடுமுறை என்பதனால் வீட்டில் இருந்த, நந்தகுமாரும், மாதவியும் பெரும் திகிலோடு ஸ்தம்பித்துப் போய் நிற்க,

அதே நேரம்,

வெளியே போலீஸ் ஜீப்புகளும் மோட்டார் பைக்குகளும் சர்... சர்... என்று டயர்கள் கிறீச்சிடப் பறந்தன.

வயர்லெஸ் மைக்கில் இவர்கள் இருக்கும் தெருவின் பெயரைக் குறிப்பிட்டு, ஒரு முக்கியமான செய்தி என்று கூறி யாரும் வீட்டை விட்டு வெளியே வர வேண்டாம் என்றும், வீட்டில் இருப்பவர்கள் கதவை மூடிக் கொண்டு சன்னலையும், மூடச் சொன்னார்கள். யாரும் பதட்டமடைய வேண்டாம் என்றும் இங்கு ஒரு வீட்டில் சமூக விரோதிகள் இருப்பதாகச் சந்தேகப்படுவதால், அந்த வீட்டை மட்டும் குறி வைப்பதாகவும் மற்றவர்கள் பதட்டமின்றி வீட்டில் இருக்குமாறு வேண்டப்பட்டனர்.

''தாத்தா என்னை யாரோ முந்தி விட்டார்கள்'' ஒரே படபடப்பாக இருந்தது சூர்யாவிற்கு.

''நான் தொடக்கத்திலிருந்தே நிறையத் தப்பான நிகழ்ச்சிகள் நடப்பதாக சந்தேகப்பட்டேனே தாத்தா. என்னைப் பைத்தியம் மாதிரியல்லவா பார்த்தீர்கள்.''

பக்கத்து வீட்டுக்காரியுடன் முதலில் நட்பாகப் பழகினாலும் இனம் புரியாத சந்தேகம் என் அடி மனதில் கொஞ்ச நாட்களாக இருந்தது உண்மை. ஏதோ சரியில்லை என்று பட்டது. ஆனால் அவ்வளவு பால் முகத்தில் இவ்வளவு வன்மையை வைத்திருப்பாள் என்று நான் கண்டேனா தாத்தா?

அதற்குள் மாதவியும் சரத்தும் ஓடி ஓடி எல்லா அறைகளின் சன்னலையும் மூட ஸ்ருதி முகம் பெரும் குழப்பத்தைக் காட்டியது.

கமாண்டோ படையினர் வீட்டைச் சுற்றி வளைத்தனர். மைக்கில் சரணடையுமாறு பலமுறை கேட்டுக் கொள்ளப் பட்டது. பிறகு சிறிது நேரத்தில் நான்கைந்து முறை துப்பாக்கி சுடும் சப்தங்களும் கேட்டது. அன்று அந்த சுற்றுப்புறத்தில் ஒருவருக்கும் தூக்கமே வர வில்லை. என்ன ஆகப் போகிறதோ என்ற திகிலும் அதைப் பற்றிய பேச்சுமாக நேரம் விரைந்தது.

கண்கள் அசதியில் பொழுது புலர்கின்ற வேளையில் சிறிது நேரம் தூங்கியவர்களுக்கு மறுநாள் செய்தித்தாள்களில், முதல் பக்க செய்தியாக பக்கம் மக்கமாக அந்த தீவிரவாத இயக்கத்தைப் பற்றி எழுதியிருந்தார்கள். எல்லா தொலைக்காட்சியிலும் அந்த செய்திதான்.

தமிழ்நாட்டில் ஊர், இடம் பற்றிச் சொல்லாமல் தீவிரவாத கும்பலைச் சேர்ந்தவர்களை கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக கமாண்டோ படையினர் ரகசியமாக பிடித்து வருவதாகவும் பின்பு நேற்று இரவு நீண்ட நாட்கள் திட்டம் தீட்டி, கும்பலாக



அவர்கள் குழுமியிருந்த நேரம், அவர்கள் இருப்பிடத்திலேயே எல்லாரையும் கைது செய்ததாகவும், அவர்கள் இருப்பிடத்தில் வெடிகுண்டு, டெட்டனேட்டர்கள், ஜெலாட்டின் குச்சிகள், இரும்பு பைப், அரிவாள் ஆகிய பயங்கர ஆயுதங்களை கைபற்றியதாகவும் செய்தி வெளியானது.

ஏதோ விடுதலை இயக்கம், அவர்களின் கூட்டாளிகளை அரசு பிடித்து வைத்திருப்பதால் அரசின் கவனத்தை ஈர்ப்பதற்காக நகரத்தின் முக்கியமான சுமார் பத்து இடங்களில் வெடிகுண்டு வைத்துத் தகர்க்க திட்டம் போட்டதைத் தமிழ்நாடு கமாண்டோ படையினர் சுக்கு நூறாக உடைத்தெறிந்தார் களாம்.

எந்தவித உயிர்ப் பலியும் பதட்டமும் தொல்லையும் விளைவு களும் இல்லாமல் தீவிரவாதிகளின் திட்டம் முறியடிக்கப் பட்ட விஷயம் பெருமையாக யாவராலும் பேசப்பட்டது.

## 15

ஆனால், இத்தனையும் சாதித்த கமாண்டோ சீப் என்ற பேட்டிக் காணப்பட்டவனைக் கண்டதும், சூரியாவிற்கு தலைசுற்றி கீழே விழாத குறைதான்.

ஆறடி மனிதன். பெரிய ரிஷி. மத்திய கமாண்டோ பிரிவைச் சேர்ந்தவன். மிகத் திறமையானவன் என்பதால் சிறப்பு வேலை நிமித்தமாக, தமிழ்நாட்டில் ரகசியமாக நுழைந்த தீவிரவாதி களைப் பிடிக்க என்பதற்காக நியமிக்கப்பட்டவனாம். ஒரே புகழாரம்தான்.

சூர்யாவின் நிலைமைதான் பரிதாபமாக இருந்தது.

சிறிது நேரம் அவளுக்கு ஒன்றுமே மூளையை எட்டவில்லை.

உடல் உறுப்புகள் அனைத்தும் சில நிமிடங்கள் வேலை நிறுத்தம் செய்ததைப் போல சிலை என்று நின்று விட்டாள்.

விஸ்வநாதர் சூர்யாவின் நிலையை அறியாமல்,

"சூர்யா" என்று அவள் முதுகைத் தட்ட சூர்யா சட் என்று விழித்துக் கொண்டாள்.

மார்பு படபடப்பாக இரட்டிப்பு வேலை செய்தது.

"உனக்குக் கூட நியாயமா அரசாங்கம் அவார்ட் கொடுக்கனும் சூர்யா. இவ்வளவு பெரிய தீவிரவாத கும்பலை நீயும் தானே கமாண்டோ படை கண்டுபிடிக்கும் முன் கண்டுபிடித்தாய்?" என்று சொல்ல,

சூர்யாவிற்கு கண்ணை இருட்டிக் கொண்டு வந்தது.

"ஆமாம் பெரிய கண்டு பிடிப்புதான. துப்பறியும் சாம்பு போல" என்று அவளுக்குள் முணுமுணுத்தபடி, கண்ணில் பொங்கி விழிந்த நீரை மறைக்க வேண்டி தலையை திருப்பிக் கொண்டு தன் அறையை நோக்கி ஓடிவிட்டாள் சூர்யா.

நினைக்க நினைக்க மனம் ஆறவில்லை சூர்யாவிற்கு

எப்படி ஒரு முட்டாள்தனமான கணிப்பு.

அதுவும் எதிலும் புத்திசாலி என்ற பெயரெடுத்த அவள்.

ரொம்பவே அவமானமாக உணர்ந்தாள் சூர்யா.

அவளின் கணிப்பும், புகாரும் கேலி கூத்தாகி விட்டதே.

ஆனால் அவனை சந்தித்த சில நேரங்களில் வேண்டும் என்றே தன்னை தவறானவள் என்பதுபோல் அவன் அவளிடம் காட்டி



விட்டு சென்ற தருணங்கள் ஞாபகத்தில் வந்து எரிச்சலைக் கிளப்பின.

ஆக மொத்தத்தில் தன்னை அவன் பைத்தியமாகவே ஆக்கி விட்டிருக்கிறான். வயிற்றைப் பிடித்துக் கொண்டு சிரித்திருந் திருப்பார் அது நிச்சயம்.

இனி, எங்கேனும் அந்த ஆறடி நோ, ரிஷியை பார்க்க நேர்ந்தால், கண்ணோடு கண் நோக்கும் துணிவு தனக்கு இருக்குமா?

இனி அந்த ஆறடி மனிதன் முகத்தில் விழித்தால்தானே அவமானம். இனி அதற்கான சாத்தியக்கூறு அரிது என்பதை உணர்ந்து சஞ்சலத்தை விரட்டினாள்.

ஆனாலும் மனசு திருப்பித் திருப்பி என்ன பெரிய தப்பு செய்து விட்டோம் என்று அதையே நினைத்துக் கொண் டிருந்தது.

ஸ்ருதி கொஞ்சம் பிரம்மை பிடித்த மாதிரி இருந்தாலும், சீக்கிரத்தில் இயல்பு நிலைக்கு வந்து விட்டாள்.

தப்பித்தோம் என்ற நினைப்பும் நிம்மதியும், தான் அதிக மாக நெஞ்சில் நின்றதே தவிர, அட மாட்டிக் கொண் டோமே என்ற பரிதவிப்பு ஒரு சின்னக் கடுகளவு கூட தோன்றாததால் அவளுக்கு அவளின் காதலின் ஆழம் புரிந்து விட்டது.

ஸ்ருதி இனி இதைப் போன்ற தவறை ஜென்மத்திற்கும் செய்ய மாட்டாள்.

சூர்யா ஸ்ருதியிடம் சமாதானமாகப் பேச வார்த்தைகளை கோர்த்து கொண்டிருந்தவள் ஸ்ருதி, அந்த தினேஷின் பாதிப்பு இன்றி சகஜமாக இருப்பதைப் பார்த்து, இனி அந்தப் பேச்சைப் பேசவே கூடாது என்று தீர்மானித்தாள்.

## 16

ரிஷியின் வீட்டிலோ ஏகப்பட்ட குழப்பங்கள். ரேவதி தன் ஒரே மகனான ரிஷிக்கு காலாகாலத்தில் 'கால் கட்டு' போட்டு விட வேண்டும் என்று, பார்த்துப் பார்த்து ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்தார். அவரைப் பொறுத்தவரையில் அந்தப் பெண் வைசாலி அழகிலாகட்டும், அறிவிலாகட்டும், செல்வத்திலாகட்டும் ரிஷிக்கு மிகப் பெரிய பொருத்தமான ஜோடியாக இருந்தாள்.

அதுவும் வைசாலி, ரிஷியின் மேல் பைத்தியமாக இருக்கவே, அவளுக்குக் கூடுதல் சந்தோஷம். தான் விரும்பும் பெண்ணை மணப்பதை விட தன்னை விரும்பும் பெண்ணை மணப்பது ரொம்ப அறிவுப்பூர்வமான சந்தோஷமான முடிவு என்பது அவரின் கணிப்பு. அந்தக் கோணத்தில் பார்த்தால் ரிஷியின் திருமண வாழ்க்கை நூறு சதவீதம் சந்தோஷமாகத் தானே அமையும்.

கல்யாணம் என்று பேச்சை எடுத்தாலே நூறு காத தூரம், ஓடும் மகனை எப்படி மசிய வைப்பது என்பதுதான் அவருக்கு எப்பொழுதும் யோசனை.

நல்ல பெண் கிடைத்தாகிவிட்டது. இப்பொழுதும் வேண்டாம் என்று ஒற்றைக்காலில் நின்றால் அவனை சம்மதிக்கவைப்பது கஷ்டம், அதனால் மறுக்க முடியாது கட்டத்தில் அவனை நிறுத்திவிட வேண்டியது தான் என்று தன்னளவில் ஒரு முடிவை எடுத்தார்.



எது செய்தாலும் அவன் நன்மைக்குதானே, கல்யாணம் ஆனால் புரிந்து கொள்ளப் போகிறான்.

வேலை நிமித்தமாக அவன் டில்லி சென்றிருந்த வேளையில், அவருடைய அண்ணன் குடும்பத்தை அழைத்துக் கொண்டு பெண் வீட்டிற்குப் போய் 'பூ' வைத்துவிட்டு வந்துவிட்டார்.

இனி ரிஷி வழுக்கி கொண்டு போக முடியாதே! டில்லியிலிருந்து வந்த ரிஷி, விஷயம் கேள்விப்பட்டவுடன் கோபத்தில் நிமிர்ந்தான். ஏனோ சூரியாவின் முகம் அவன் நெஞ்சத் திரையில் மின்னி மறைந்தது. ஆனால் அம்மாவின் கண்களில் ஏக்கம், தயக்கம், கூடவே மகன் ஏதாவது சொல்லிவிடுவானோ என்று அதுவரை தோன்றாத பயமும் எட்டிப் பார்க்க, அந்த பார்வையில் தணிந்தான் ரிஷி.

அவன் விஷயத்தில் அவருக்கில்லாத உரிமையா? உங்கள் விருப்பம் என்று குனிந்தபடி மேலே ஒன்றும் பேசாமல் அமர்ந்த குரலில் கூறியது ரேவதிக்கு பிடிக்க வில்லைதான். ஆனால் எப்படியோ கல்யாணம் பண்ணிக் கொள்ளச் சம்மதித்து விட்டானே என்று சந்தோஷப் பட்டார் அவர்.

ஆனால் அந்த சந்தோஷம் தான் நீண்ட நாட்கள் நீடிக்க வில்லை.

திருமணம் நிச்சயிக்கப்பட்டதிலிருந்து, வைசாலி இங்கே வீட்டிற்கு வருவதும், போன் செய்வதும் அதிகமாக இருந்தாலும், மகன் தன் முயற்சியாக ஒரு போன் கூட போடாது அவரின் மனதை மிகவும் உறுத்தியது.

மகனின் மகிழ்ச்சியில் மட்டும் குறியாக இருந்தவர், ரிஷி ஒரு முறை! வைசாலி போன் செய்த போது ''நான் இல்லை'' என்று சொல்லுங்கள் என்று செய்கை செய்து காட்டியது ரொம்பவே பாதித்தது.

வாழ்க்கை முழுவதும் ஓர் இதமான துணைவியாக வரப் போகிறவளை தொடக்கத்திலேயே ரிஷி தவிர்க்க நினைக் கிறான் என்பது நம்ப முடியாத அதிர்ச்சியாக இருந்தது.

மகனிடம் தவறு இருக்கிறதா? அல்லது மருமகள் தேர்வு தவறா? குழம்பிப் போனார் ரேவதி, மறுநாள் வீட்டில் வந்து கலகலத்துப் பேசிக் கொண்டிருந்த வைசாலியை நிமிர்ந்து கூடப் பார்க்காமல், சொல்லாமல் கொள்ளாமல் ரிஷி கிளம்பிச் செல்லவே ரேவதி விழித்துக் கொண்டாள். தனக்குள்ளேயே திணறிக் கொண்டிருக்காமல் ரிஷியிடம் மறுநாள் நேரடியாக கேட்டும் விட்டாள்.

''உனக்கு... வைசாலிக்கும் ஏதாவது பிரச்சினையா?''

''அம்மா..'' என்று சற்று தயங்கி நிறுத்திய ரிஷி பின் தொடர்ந்து, ''உங்களிடம் இதைப் பற்றிக் கொஞ்சம் தீவிரமாக பேச வேண்டும்'' என்று எண்ணியிருந்தேன். வாருங்கள் அம்மா உட்கார்ந்து பேசலாம்'' என்றவன் தாயை சோபாவில் அமரச் செய்து விட்டு தானும் அருகே அமர்ந்து மீண்டும் தயக்கமாக வைசாலிக்கு என்னைப் பிடித்த அளவு என் வேலையைப் பிடிக்கவில்லை. தீவிரவாதி, கொள்ளைக்காரர்கள் என்று அவர்கள் பின்னால் நான் ஓடிக் கொண்டிருந்தால் என் உயிருக்கு கியாரண்டி சொல்ல முடியாதாம். இன்னும் என் னென்னவோ சொன்னாள். பிறகு கல்யாணத்திற்கு அப்புறமாக ான் என் கமோண்டோ வேலையை விட்டு விட வேண்டு ாம். அவளுக்கு 'கூஜா' தூக்கிக் கொண்டு பின்னாடியே ஓடி ரவேண்டும் என்று நினைப்பாள் போல'' அவன் வார்த்தை ல் அருவருப்பு எட்டிப் பார்க்க,

''என்னது புதுக்கதையா இருக்கு'' அவளுக்குமே அதிர்ச் ாக இருந்தது.

''உடல் மண்ணுக்கு, உயிர் நாட்டுக்கு என்று கமாண்டோ ாக எத்தனை பெருமையாக நான் இருக்கிறேன். அதுவும்



எத்தனை தேர்வுகளில் முன்னேறி இந்த நிலைக்கு கஷ்டப் பட்டு வந்திருக்கிறேன், இவளானால் வேறு மாதிரிப் பேசுகிறாள். சில சமயங்களில் எரிச்சலே வந்துவிடுகிறது. எனக்குத் துளிக் கூட இஷ்டமேயில்லை யம்மா பேசாமல் கல்யாணத்தை நிறுத்திவிடுங்கள்'' நெற்றியைச் சுருக்கி ரிஷிபேச, தலை சுற்றியது அவளுக்கு, ''கல்யாணத்தை நிறுத்தவா? பெண் வீட்டில் என்னத்தைச் சொல்ல. இவ்வளவு தூரம் முடிவு செய்து விட்ட பின் வைசாலியிடம் நான் பேசிப் பார்க்கிறேன்டா; சின்னப் பிள்ளைதனமாக ஏதாவது பேசியிருப்பாள், அதெல் லாம் சரி செய்து விடலாம்'' என்று ரேவதி யோசனையுடன் பேச,

''ப்ளீஸ் ம்மா புரிஞ்சுக்கோங்க. நான் உயிராக நினைக்கும் வேலை இது. இது என் கனவு, இதையே அவள் மட்டமாக பேசினாள், ஐ டோண்ட் லைக் இட், முதல் பொருத்தமே பொருத்தமாக இல்லாத போது, வேறு பொருத்தம் இருந்தால் என்ன இல்லாமல் போனால் என்ன?'' ரிஷி புருவத்தை நீவிவிட்டபடி சொல்ல,

''தப்பில்லையாடா?''

''இதில் தப்பு, சரி பார்த்தால் என்னோட வாழ்க்கையே பெரிய தவறாகிவிடும் அம்மா'' என்று பேச்சை அதோடு நிறுத்திவிட்டு எழுந்தான் அவன். இனி அம்மா பார்த்துக் கொள்வார்கள் என்ற திடம் அவன் பார்வையில் இருந்தது.

செய்வதறியாது திணறிப்போனாள் ரேவதி.

நகரின் பெரும் செல்வந்தரான வைசாலியின் தந்தை, மாப்பிள்ளை வீட்டில் இருந்து வந்த செய்தியில் மிருகமானார். முதலில் ரொம்ப பதவிசாகப் பேசியவர் காரணத்தை அறிந்த வுடன் மிகவும் கீழ்த் தரமாகப் பேசினார். அவரின் பேச்சை கேட்கையில் ரேவதிக்குப் பெரும் கவலையாக இருந்தாலும்,

உள்ளூர. இவ்வளவு மோசமானவர்களா? நல்லவேளை, சம்பந்தம் நடக்காமல் போனது எவ்வளவு நல்ல விஷயம் என்று சந்தோசப்பட்டுக் கொண்டாள்.

## 17

வைசாலி.

காலேஜுல் படிக்கும் போதே சீனியரான ரிஷியின் மேல் ஒரு தலையாக ஆசை கொண்டவள்.

திருமணம் என்று ஒன்று நடந்தால் அது ரிஷியுடன் மட்டுமே இருக்க முடியும் என்று உறுதியாக எண்ணி அவன் மேல் பெரும் ஆசையை வளர்த்தவள்.

காலேஜ் படிப்பு முடிந்து வேலையில் ரிஷி ஏறிய பின்பும், அவனை அவளால் மறக்கவே முடியவில்லை. பணமும் அழகும் கொட்டிக் கிடந்ததால் எப்படியாவது அவனை மணந்தே தீரவேண்டும் என்கிற ஆசை கொஞ்சம் கொஞ்சமாக ஏறி கிட்டதட்ட வெறியாகவே மாறிவிட்டிருந்தது.

ஒரே மகளின் ஆசையில் குறுக்கே நிற்க செல்வரத்தினமும் நினைக்கவில்லை. காரணம் அவள் ஆசைப்பட்ட இடமும் சாதாரண இடமாக இல்லை. பாரம்பரியமாக செல்வத்தில் திளைத்த குடும்பம், சின்ன வயதிலேயே புகழேணியில் வெகு வேகமாக ரிஷி செல்கிறான் என்பது அவன் இலாகாவில் விசாரித்ததும் தெரிந்து விட்டது. பிறகென்ன ரிஷியின் தாயிடம் ஆள் அனுப்பி, பேசிப் பேசிக் கரைத்து, பிறகு நேரில் சந்தித்து



பேசி ஜாதகம் பார்த்து அவசரப்படுத்திக் கல்யாணத்திற்கு உறுதியும் வாங்கினாள். அதுவரை எல்லாமே வைசாலி எதிர்பார்த்த மாதிரியே தான் நடந்தது.

ஆனால் திருமணப் பேச்சு நின்று போனது. அவளை தீயிலிட்டது போல எரித்தது.

ரிஷியிடம் எத்தனை முறை ஒட்டி ஒட்டிப் பழகினாலும் அவன் எட்டிப்போனது, அவளுக்கு மகிழ்ச்சியாகத்தான் இருந்தது. திருமணத்திற்கு முன் அவளை தொடுவதற்குக் கூட கூச்சப்படுகிறான் என்று நினைத்தாள். இப்பொழுதுதானே தெரிகிறது. அவளையே பிடிக்கவில்லை என்பது.

மரண அடி.

அவளை நினைக்க, நினைக்கத் திருமணப் பேச்சு நின்று போனதைப் பற்றி யோசிக்க யோசிக்க, நாட்கள் செல்லச் செல்ல வைசாலிக்கு ரிஷியின் மேல் இருந்த காதல், ஆசை எல்லாம் கொடிய விஷமாக மாறியது.

அவள் வாழ்க்கையை இருட்டாக்கியவன் நிம்மதியாக இருக்கவே கூடாது என்கிற பழிவெறி மனதில் எப்பொழுதும் ஓடிக் கொண்டேயிருந்தது.

வைசாலி, அவன் வாழ்க்கையில் புகுந்து குழப்பங்கள் செய்யப் போவதை ரிஷி உணரவேயில்லை.

## 18

நாட்கள் மிக மெதுவாகவே உருண்டோடின. அன்று ஒரு நெருங்கிய சிநேகிதரின் மகன் கல்யாண ரிசப்ஷன்

என்று சூர்யா வீட்டில் எல்லாரும் குடும்பமாக சென்றிருந் தார்கள்.

ஊதா நிற கரையிட்ட மஸ்டர்டு மஞ்சள் நிறப்பட்டுப் புடவையில் சூர்யாவின் தங்க நிறம் நிஜமாகவே தகதகவென்று ஜொலித்துக் கொண்டிருந்தது.

நல்ல கூட்டம், தெரிந்தவர்கள், தோழர்கள், தோழிகள் என்று கலகலத்துக் கொண்டிருந்தாள் சூர்யா.

அவள் கலகலப்பெல்லாம், ரோகனையும் அவன் தோளில் கைப்போட்டு சிரித்துப் பேசிக் கொண்டிருந்தவனைக் கண்டதும், இருந்த இடம் தெரியாமல் காணாமல் போய் விட்டது.

ரிஷி.

ரோகன் வீட்டு விருந்து அன்றும் ரோகனை சர்ப்ரைஸ் பண்ணத்தான் பின்வாசல் வழியாக மதில் சுவர் குதித்து வந்திருப்பானோ?

அதன் பிறகு அவன் பேசிய பேச்சும், செய்த செய்கையும் ச்ச் சை நினைத்தால்... அவன் கண்களில் படாமல் மண்ணில் புதைந்து ஒளிந்து கொள்ளலாமா என்று தோன்றியது.

நாட்டிற்காக நல்லது செய்த எப்பேர்ப்பட்ட மனிதன் இவனைப் போய்...

நாலாபுறமும் சுற்றும் அவனின் கூர்மையான கண்களில் இருந்து அவளால் தப்ப முடியுமா? முயற்சித்துதான் பார்க்க ாமே என்று அவள் அங்கிருந்து நகர முற்பட,

ரோகன் சூர்யாவைக் கண்டு விட்டான். ரிஷியுடன் வந்து வளிடம் அறிமுகம் செய்து வைத்தான். இருவரும் பள்ளி நேகிதர்களாம்.



''அன்றைய விருந்தின் போது வருகிறேன்' என்று சொல்லி விட்டு ஏமாற்றி விட்டான் சூர்யா. ஏதோ மிக அவசரமான என்கவுண்டர் போல்'' என்று ரோகன் சொல்ல,

தன்னையறியாமல் சூர்யாவின் கண்கள் ரிஷியை நோக்க,

ரிஷி ஒற்றை புருவத்தை உயர்த்தி உதடு ரகசியமாக விரிய, உனக்குத்தான் தெரியுமே என்ற பாவனையில் நோக்க,

சூர்யா சட் என்று பார்வையைத் தழைத்தாள். இனம் புரியாத உணர்வு அவளை ஆக்ரமிக்க நெஞ்சு படபடத்துப் போனது.

ரோகன் விடாமல் பேசிக் கொண்டிருந்தான். அடுத்த வாரம் அமெரிக்கா போகிறானாம். அதன் பிறகு இரண்டு வருடம் கழித்துத் தான் சென்னை வருவானாம். ரிஷியும் சில மாதங் களில் அமெரிக்காவிற்குச் சுற்றிப் பார்க்க வருவதாகச் சொல்லி யிருக்கிறானாம். அனேகமாக அது ஹனிமூன் டிரிப் ஆகத்தான் இருக்குமாம். இன்னும் ஏதேதோ அவன் பேசிக் கொண் டிருக்க,

சூர்யாவின் நெஞ்சில் ஏதோ பெரிய பாறாங்கல்லை யாரோ ஏற்றி வைத்து விட்டதைப் போல் திண்டாடிப் போனாள். அதன் காரணத்தை அவளால் சரியாக உணரமுடியவில்லை. ஆனால், அவ்வளவு நேரமாக குதித்துக் கொண்டு இரட்டிப்பு வேகத்துடன் ஓடிய ரத்த ஓட்டம் நின்று போனது போல் சோர்ந்துப் போனாள்.

இவனுக்கு கல்யாணம் நிச்சயமாகி விட்டதா?

யார் பெண்?

ரிஷியின் கண்கள் அவள்மேல் படருவதை சூர்யா உணர்ந்தாள். ஆனால் அவன் கண்களை நேருக்கு நேர்

சந்தித்துப் பேசுவது முடியாத காரியம் போல் அவனுக்குத் தோன்றியது.

அவள் செய்த முட்டாள்தனமான செய்கைகளும், கனிப்புகளும் அல்லவா ஞாபகத்தில் வந்து தொலைக்கிறது.

நல்லவேளையாக விஸ்வநாதரும், மாதவியும் - ரோகனையும் ரிஷியையும் கண்டு விட, கைகுலுக்கலிலும் பாராட்டுதலிலும் பேச்சு வளர, சூர்யா அங்கிருந்து மெல்ல நழுவி சரத், ஸ்ருதியின் அருகே சென்றமர்ந்தாள்.

அதன்பிறகு ஒன்றுமே ரசிக்கவில்லை.

அதற்குள் சரத்,

''அக்கா... அக்கா,'' என்று ரகசிய குரல் எழுப்பினான்.

''என்னடா..'' என்றாள் சூர்யா.

''நம்ம ரோகன் கிட்டே பேசிட்டு இருக்காரே அது தானேக்கா ரிஷி, பேப்பர்லே எல்லாம் நியூஸ் வந்ததே!''

சூர்யா 'ம்ம்...' கொட்ட.

''அவர் பார்வை சதா உன்கிட்டே வந்து மீளுதுக்கா... உன்னை சைட் அடிக்கிறார்ன்னு நினைக்கிறேன். மொத்தத்துல நீ தேடுற நெஞ்சு நிமிர்த்தின வீரமான ஆள் இவர்தான்க்கா. பேசாம இவரையே கட்டிக் கோக்கா'' என்று ஆலோசனை வழங்கி நமுட்டு சிரிப்புச் சிரித்தான்.

''நீ என்கிட்டே அடி வாங்கப் போறே'' என்று உதட்டைக் கடித்துக் கொண்டு தம்பியை மிரட்டிய சூர்யாவின் உள்ளம் எரிச்சலுற்றது.

''பைத்தியம்'' என்று நேரடியாக பட்டத்தைக் கொடுத்தவனுக்கு அவள் மீது ஈர்ப்பு ஏற்படுவதாவது, அதோடு அவன்



ஏற்கெனவே திருமணம் நிச்சயிக்கப்பட்டவன். ஹனிமூன் கொண்டாட இடம் கூட முடிவு செய்து விட்டவன்.

அந்த நிமிடம், அந்த நொடி வரை ஏற்படாத இனம் புரியாத ஏக்கம், சூர்யாவினுள் சட்டென்று பிரவாகமாக எழும்ப, கண்கள் தன்னிச்சையாக அவனைத் தேடிப் பார்வையைத் திரும்ப, அதே நேரம் ரிஷியின் பார்வையும் அத்தனை கூட்டத்தையும் மீறி அவள் மேல் இருக்க, அவளை அறிந்து கொண்ட தினுசில் அவன் புன்னகையில் உதட்டை விரிக்க, சூர்யாவிற்கு முகம் குப் என்று சிவந்து போயிற்று.

அட கடவுளே! என்ன நினைப்பான்? மானஈனம் இடையாத பெண் என்று நினைத்திருப்பானோ? அசிங்கமாக மாட்டிக் கொண்டாளே? சூர்யாவிற்கு தன் மேலேயே எரிச்சல் வந்தது.

அதுவரையில் எந்த சஞ்சலமும் இல்லாமல் தெளிவான நீரோட்டமாக இருந்த அவள் மனதில், முழுவதுமாகப் புரியாத எண்ணங்களும் நினைவுகளும் எதிர்பார்ப்புகளும், கண்கட்டு வித்தையைப் போல் மாறி மாறி வந்து அவளின் நிம்மதியை கெடுத்தது.

## 19

மறுநாள், மாலை வீட்டுப் பக்கத்திலுள்ள டிபார்ட்மெண்ட் கடையில் வேண்டிய சில சாமான்களை வாங்கிக் கொண்டு ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்து கொண்டிருந்தாள் சூர்யா.

அப்போது ''ஹலோ'' என்று மிக சமீபத்தில் பின்புறத்தில் இருந்து வந்த குரலில் சடக் என்று திரும்பினாள்.

அங்கே நின்று கொண்டிருந்தவனைக் கண்டதும் கை பிடியில் இருந்த ஸ்கூட்டி நழுவியது. முகம் சூடாகிச் சிவந்தது அது அவமானத்திலா? இல்லை அவன் சமீபத்திலா? என்பது சூர்யாவிற்குப் புரியவில்லை.

சூர்யாவின் கைகளில் இருந்து நழுவிய ஸ்கூட்டியை வெகுலாவகமாக கீழே விழும் முன் ஒற்றைக் கை கொண்டு தாங்கி நிறுத்தினான் அவன் ரிஷி.

''வீர தீர தைரிய அரசி, ஒரு ஹலோவில் பயந்து விடலாமா?''

அவன் வார்த்தைகளில் இருந்த நையாண்டி சூர்யாவிற்குப் புரியாமலா?

உதட்டைப் பற்களால் கடித்து தன் பதட்டத்தை தணிக்க முயன்றாள்.

அவள் செய்த காரியங்களுக்கு இதெல்லாம் அவசியம்தான்.

இவனைப் பார்க்காமலேயே இருந்திருந்தால் கொஞ்சம் நிம்மதியாக இருந்திருக்கலாம்.

அவள் செய்த முட்டாள்தனமான செய்கைகள் அல்லவா மீண்டும் மீண்டும் ஞாபகத்தில் வருகிறது.

நெஞ்சப் படபடப்பு அதிகரிக்க சூர்யா, சீக்கிரமாக அவன் அண்மையில் இருந்து நகர வேண்டும் என்று உணர்ந்து.

அவனை நிமிர்ந்து நோக்கினாள்.

தொட்டும் தொடாமலுமாக மேலோட்டமாக எதையாவது பேசி விட்டுச் சட் என்று நகர்ந்து விட வேண்டும் என்று எண்ணிய சூர்யாவிற்கு அவன் கண்களின் கூர்மையிலும்,



அதில் நடனமாடிய ரசனையிலும் நா வறண்டு போனது. ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு.

''நிறைய முறை புரியாமல், முட்டாள்தனமாக உங்களுக்குத் தடங்கள் செய்து விட்டேன் ஸாரி'' என்று பல முறை அவனிடம் சொல்ல வேண்டும் என்று எண்ணிய அந்த மன்னிப்பை வேண்டி விட்டு வேலை முடிந்தது போல,

ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள்.

உடனே பக்கத்தில் நின்றவன், அவளின் ஸ்கூட்டியில் இருந்த சாவியை உருவினான்.

சூர்யா என்ன என்பது போல் புருவத்தை உயர்த்த அவன் உதடு புன்னகையில் மிக வசீகரமாக விரிந்தது.

''உன்னிடம் பேச வேண்டும். கொஞ்ச தூரம் நடந்து விட்டு வரலாம் வருகிறாயா?'' என்று வெகு இயல்பாக, நெடு நாள் பழகிய தோழியை அழைப்பதைப் போல் அழைத்தான்.

அவனிடம் கோபப்பட்டு அவளின் ஸ்கூட்டி சாவியை கேட்டுப் பெறக்கூட அவளுக்கு உரிமை இருப்பதாகத் தெரியவில்லை.

அவளின் மனசு அவளையும் மீறிக் கொண்டு முரண்டு பண்ணியது. நெஞ்சம் தடதடக்க,

''எதுவானாலும் இங்கேயே பேசுங்கள்... நேரமானால் வீட்டில் தேடுவார்கள். முதலில் சாவியைக் கொடுங்கள்'' என்று சாவிக்காக கைகளை நீட்டினாள் சூர்யா.

நீட்டிய அவள் கையை சட் என்று பற்றிக் கொண்டு அவன் முன்னே நடக்க முனைந்தான்.

சூர்யா அவன் தொடுதலில் தவித்துப் போனாள்.

''ப்ளீஸ் விடுங்க! கையை விடுங்க'' என்று தவிப்புடன் கையை உருவ, ரிஷி அவளைத் திரும்பிப் பார்த்தான். பின்

அடக்க முடியாமல் பக் என்று சிரித்து விட்டாள். சிரிப்பி னூடே,

''ஓகே தொடுவதும், கட்டியணைப்பதும் உன் உரிமை யல்லவா? அதை நான் செய்தால் குற்றம்தான் இல்லையா?'' என்று கண்களில் குறும்பு மின்ன அவன் கேட்க.

சூர்யாவின் முகம் செக்கச் செவேல் என்று சிவந்து போனது. அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட முடியாமல் நெஞ்சு துடித்துப் போனது.

ஆறடி உயரத்தில் வசீகரமாக ஆண்மையின் இலக்கணமாக திகழும் இவனையா? கட்டிப் பிடித்தேன்?

அந்த முட்டாள்தனத்தைச் சொல்லி வேறு காட்ட வேண்டுமா?

பூமி வெடித்து உள்ளே சென்று விடமாட்டேனா என் றிருந்தது சூர்யாவிற்கு.

அன்று சரத்துக்கு இண்டர் ஸ்கூல் கிரிக்கெட் மேட்ச் நடந்தது.

வீட்டில் எல்லாரையும் மேடச் பார்க்க வருமாறு கேட்டுக் கொண்டிருந்தான்.

விஸ்வநாதர் மட்டும் அவனின் ஒரு டோர்னமெண்ட் டையும் விடமாட்டார். பேரன் விளையாட்டைப் பார்க்க ஆர்வமாக காலையில் அவன் கிளம்பும் போது கூடவே சென்று விடுவார்.

மேட்ச் கிரவுண்ட் வெகு தூரத்தில் இருந்ததால் இருவரும் பஸ்ஸில் திரும்பி வந்தார்கள். புட்வோல்டு டிபார்மெண்ட் கடை இருக்கும் பஸ் டாப்பில் இறங்கினார்கள்.

அங்கிருந்து ஆட்டோ பிடித்துப் போனால் வீடு சேர அதிகபட்சம் பத்து நிமிடம்தான் ஆகும்.



அப்படி ஆட்டோ பிடிப்பதற்கு நின்ற வேளையில் தான்.

சூர்யா, ரிஷியுடன் நடந்து வருவதைக் கண்டார்கள்.

''தாத்தா சூர்யாக்கா'' என்றபடி தோளில் தொங்கிய கனத்த கிரிக்கெட் பையுடன் சரத் அவளை நோக்கி ஓட,

சூர்யா தம்பியையும், பின்னோடு நடந்து வந்த விஸ்வ நாதரையும் கண்டவுடன் துணை கிடைத்த சந்தோஷத்தில், ''என்ன ஜெயித்தீங்களாடா?'' என்று கேட்க சரத் உதட்டைப் பிதுக்கி, விரல்களை மூடி கட்டை விரலை மட்டும் நிமிர்த்தி கவிழ்த்துக் காட்டினான்.

ரிஷியையும், சூர்யாவையும் ஒரு சேரக் கண்டதும், விஸ்வநாதர் கண்களில் ஆவல் பளிச்சிட்டது.

அதைப் புரிந்து கொண்ட 'சூர்யா' பல்லைக் கடித்தாள். இந்த தாத்தா என்ன நினைத்துக் கொண்டார்?

ரிஷி, விஸ்வநாதரிடம் எந்த அறிமுகமும் இல்லாமல் சகஜமாக பேசிக் கொண்டிருந்தான். அவன் பேச்சில் லயிக்க முடியாமல் பல்லைக் கடித்துக் கொண்டிருந்த சூர்யா, அவன் பேசிய சில சொற்களில், விஸ்வநாதரை நெஞ்சப்படபடப் புடன் முறைத்தாள்.

''இரண்டு மாதங்களுக்கு முன் நீங்கள் கொடுத்த கம்ப்ளெயிண்டில்தான், இந்த பகுதியில் தீவிரவாதிகள் ஆக்கிரமிப்பை கண்காணிக்க முடிந்தது. சரியான சமயத்தில் உங்கள் சந்தேகம் சரியே என்று எங்களாலும் கண்டுபிடிக் கப்பட்டு விஷயம் விபரீதமாகாமல் தப்பிக்க முடிந்தது. ஆனால் உங்கள் பேத்திக்கு வந்த சந்தேகம் தான்..'' என்று நமுட்டுச் சிரிப்புடன் குறும்பாக ரிஷி, சூர்யாவைப் பார்க்க, விஸ்வநாதர் சத்தம் போட்டுச் சிரித்தே விட்டார்.

சிரிப்புக்கும் கேலிக்கும் தானா? சட்டென்று யாரிடமும் ஒன்றும் சொல்லாமல், ரிஷியின் கைகளில் இருந்த சாவியை பிடுங்கிக் கொண்டு நடக்கத் தொடங்கினாள்.

இந்த தாத்தா... கூடச் சேர்ந்து சிரிக்கின்றாரே, கோபம் தலைக்கேறியது.

இத்தனை விஷயம் செய்திருக்கிறார், என்னிடம் இதைப் பற்றி மூச்சு விடாமல், வேடிக்கை பார்த்திருக்கிறார்.

வீட்டிற்கு வரட்டும்.

சூர்யா கோபப்பட்டுத் திரும்பி ஸ்கூட்டியை நோக்கி நடப்பதைக் கண்டதும் ரிஷி நெற்றியைச் சுருக்கினான்.

அவள் புறமாக தொடர்ந்து செல்ல வேகமாக காலை ஓர் எட்டு வைத்தான். ஆனால் தொடர முடியாமல் விஸ்வநாதர் அவன் கை பற்றி நிறுத்தினார்.

சரத் சூர்யாவின் பின்னால் ஒன்றும் புரியாமல் ஓடினான்.

## 20

**வீ**ட்டில் அன்று விஸ்வநாதருடன் சூர்யா நன்றாகவே சண்டையிட்டாள்.

ரிஷியை சூர்யா முதலில் இருந்து தீவிரவாதி கண்ணோட்டத்தில் பார்த்ததை அவர் அறிந்துதானே இருந்தார். அப்படி இல்லை என்று லேசாக கோடிட்டுக் காட்டியிருந்தாலும் நேர்ந்த அவமானத்தில் இருந்து சூர்யா தப்பியிருப்பாளே.



இப்போது ரிஷியை நேருக்கு நேர் பார்த்து இரு வார்த்தைகள் பேசுவதற்கே தடுமாற்றமாக இருக்கிறதே.

பேத்தியை தாத்தா மாட்டிவிட்டது எந்த விதத்தில் நியாயம்.

சூர்யா தாம், தூம் என்று கடந்து குதித்ததற்கு விஸ்வநாதர் பதில் ஒன்றும் பேசவில்லை. உண்மையில் பேத்தியின் கோபம் அவருக்கு வேடிக்கையாகவே இருந்தது.

நான்தான் தொடக்கத்திலிருந்தே தீவிரவாதப் பிரச்சினையைப் பற்றி யோசிக்காதே, நான் பார்த்துக் கொள்கிறேன் என்றேனே'' என்று அவர் மெல்ல சொல்ல,

''ஆமாம் பார்த்தீர்கள்! பார்த்தீர்கள். நான் அவமானப்பட்டதைப் தான் பார்த்தீர்கள்'' என்று கோபத்தில் முணங்கலான வார்த்தைகள் அவள் வாயில் இருந்து உதிர்ந்தன.

''நீ இதில் கோபப்படுவதும் அவமானப்படுவதுமான பிரச்சினை எங்கே வந்தது?'' விஸ்வநாதர் கேட்க,

''தாத்தா, விடுங்க தாத்தா... என் பிரச்சினை உங்களுக்குப் புரியப் போவதில்லை'' என்று சூர்யா கொஞ்சம் அமைதியான குரலில் கூற,

''எனக்கு மட்டுமா புரியவில்லை'' என்று விஸ்வநாதர் சூர்யாவை நோட்டம் விட்டுக் கொண்டே சொல்ல,

''வேறு யாருக்குப் புரியவில்லை என்கிறீர்கள் தாத்தா'' கண்களில் கூர்மையுடன் சூர்யா விஸ்வநாதரை நோக்க,

''என்னைப் பற்றி மட்டும்தான் சொல்கிறேன்'' என்று முணு முணுத்தபடி அவர் தன்னுடைய அறைக்கு சென்றார்.

## 21

நாட்கள் மெல்ல நகர்ந்தது.

சூர்யா அன்று வேலைக்கான இண்டர்வியூக்குப் போய்விட்டு மாலை வீடு திரும்பினாள்.

ரிட்டர்ன் எக்ஸாமும், இண்டர்வியூவும் ரொம்பவே நன்றாக செய்திருந்தாள். வெளி ஆட்கள் இடையூறு இல்லாவிட்டால் அந்த வேலை அவளுக்குக் கிடைப்பது நிச்சயம்.

சீக்கிரத்தில் ஏதாவது வேலையில் ஏறிவிடுவது அவளுடைய எண்ணப் போக்கிற்கு ஒரு சிறந்த மருந்து என்று புத்திசாலியான சூர்யாவிற்குப் புரிந்தது.

சமையலறையில், டீ போட்டு அவளுக்கும், விஸ்வநாதருக்குமாக இரண்டு கப்களில் எடுத்துக் கொண்டு சென்றாள்.

'டீ'யை கைகளில் எடுத்துக் கொண்டே சூர்யாவிற்கு வேலையும் தந்தார்.

''சூர்யா மாலை ஆறுமணி ரெயிலில் என் ப்ரண்ட் தாமஸ், சாரதி பேரன் பிறந்த நாள் விழாவுக்கு ஊருக்கு போறார். நானும் போவதாக இருந்தேன் முடியவில்லை. ஸ்டேஷன் போய் இந்த கிப்ட், பார்சலை 'குழந்தைக்குக் கொடுக்க' என்று கொடுத்து விடுகிறாயா? என்னோட மொழி பெயர்ப்பை பப்ளிஷ் பண்ணுவதைப் பற்றி பேச, ப்ரஸ்லேயிருந்து இன்று



வருவதாகச் சொன்னார்கள். என்னால் எங்கேயும் போக முடியாது'' என்று ரெயிலின் பெயரையும், கோச் எண்ணையும் கூறினார்.

வேலையிலிருந்து ஓய்வு பெற்றதிலிருந்து ஒரு ஆங்கிலப் புத்தக பதிப்பிற்குப் புத்தக ரிவ் யூ எழுதும் வேலையை வீட்டில் இருந்தே செய்பவர் விஸ்வநாதர். அதுவும் தவிர சீவக சிந்தாமணியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும் வேலையில் கடந்த சில மாதங்களாக தீவிரமாக இறங்கியிருந்தார். அது ஓரளவுக்கு முடியும் நிலைக்கு வந்துவிட்டிருந்தது.

அந்த நாவலைப் பப்ளிஷ் பண்ணுவதைப் பற்றிப் பேச வருவதாக இன்று சொல்லியிருந்ததால், ரெயில்வே ஸ்டேஷனுக்குச் செல்லும் வேலையை பேத்தியிடம் ஒப்புவிக்க வேண்டியதாயிற்று.

'ஸ்டேஷனில் சூர்யா பார்க்கிங்கில் இடம் பார்த்து ஸ்கூட்டியை நிப்பாட்டி, டோக்கன் வாங்கி, ப்ளாட் பார்ம் டிக்கெட் வாங்கி, உள்ளே நுழைந்த சமயம், ரெயில்வே ஸ்டேஷனே ஜெ... ஜெ... என்று இருந்தது.

காக்கி உடையணிந்த போலீஸ்காரர்களும் வின் என்று முரட்டுத் தனமாக பளபளப்புடன் இருந்த நாயை சங்கிலியில் இணைத்து அதனுடன் ஓடிய போலீஸ்காரர்களையும் கண்டு சூர்யா விழி விரித்தாள்.

உடனே அதன் காரணம் சூர்யாவிற்குப் புரிந்து போனது.

பதினொரு வருடங்களுக்கு முன் இதே தினம்தான் பாபர் மசூதி இடிக்கப்பட்டது. இதே தினம் வேறு எந்த அசம்பாவிதமும் ஏற்படக் கூடாதென்று எல்லா இடங்களிலும் பலத்த பாதுகாப்பு நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ரெயில்வே ஸ்டேஷனில் நுழைய மக்கள் செக்யூரிட்டி செக் அப் வாசலைத் தாண்டிதான் செல்ல வேண்டியிருந்தது. மக்கள் வரிசையில் ஒருவர் பின் ஒருவராகச் செக் - அப் வாசலைக் கடக்க, சூர்யாவின் முறை வந்ததும், சூர்யாவும் செக்யூரிட்டி செக் - அப் வாசலை கடக்க, சின்னதாய் பீப் சப்தம் கேட்டது. சட் என்று அந்த செக்யூரிட்டி, செக் - அப் வாசலில் இருந்த லைட் டிடக்டரைப் பார்க்க, அங்கு ஒளிர்ந்த விளக்குகளின் எண்ணிக்கை அதிகப்படவே, அந்த செக்யூரிட்டி சூர்யாவைப் பார்த்த பார்வையில் மாற்றம் தெரிந்தது.

சூர்யாவே திடுக்கிட்டுப் போனாள்.

ஏதோ தவறு நேர்ந்திருக்கிறது என்று புரிந்து அவள் நெற்றியில் வேர்த்தது. அந்த செக்யூரிட்டியைப் பார்த்து, புருவத்தை உயர்த்தி என்ன? என்று உள்ளூர லேசான பயத்துடன் சூர்யா கேட்க,

"கொஞ்சம் என்னோடு வாருங்கள்" என்று அவன் குரலில் கடினத்துடன் கூற, அவள், முன்னே ஒன்று பின்னே ஒன்றாக இரண்டு செக்யூரிட்டிகள் சட்டென்று தோன்றி அவள் நடந்த போது கூடவே நடக்க,

சூர்யாவிற்கு கையில் இருந்த பார்சலின் மேல் நொடியில் சந்தேகம் உண்டாயிற்று.

பார்சலில் ஏதாவது இருக்கிறதா?

எத்தனை படங்கள் பார்த்திருக்கிறாள்?

எங்கேயாவது கீழே வைத்தோமா? அந்நேரம் பார்த்து ...ண்டு வைத்த இந்த பார்சலை யாரேனும் மாற்றி விட் ...ர்களா?

இல்லை அப்படியெல்லாம் இருக்காது. தாத்தா கொடுத்த ...ந்த சைஸ், அதே கலர் பேப்பர், ஆனாலும் சந்தேக கேஸ்



என்று அழைத்துப் போனால், எத்தனை கேள்விகள், கேட்பார்களோ? நேரமும் எவ்வளவு விரயம் வெளியே தைரியமாக இருப்பதைப் போல் காட்டிக் கொண்டாலும் அவளின் இதயம் பலவற்றையும் எண்ணி அஞ்சியது.

அழைத்துப் போனவர்கள் ஏதோ மனித வெடிகுண்டை கூட்டிப் போவது போல மிக கவனத்துடன் அழைத்துச் செல்ல சூர்யாவிற்குச் சிரிப்பதா? அழுவதா என்றே தெரியவில்லை.

செக்யூரிட்டி செக்கப்பில் உள்ள மெட்டல் டிடக்டரில் இவள் ஏறியவுடன் படபடவென ஒளிர்ந்த விளக்குகளின் காரணமும் அவளுக்குப் புரியவில்லை. சின்ன தங்கச் சங்கிலியும், இரு மெல்லிய தங்க வளையல்களையும் மெட்டல் என்றால், இவள் மட்டுமா உலகத்தில் தங்கம் அணிந்திருக்கிறாள்.

அப்படி என்றால் எதிலோ நிச்சயமாகத் தவறு இருக்கிறது.

தாத்தாவிடம் ஏமாற்றி யாராவது இந்தப் பார்சலை கொடுத்திருப்பார்களா?

அந்த மேலாளர் அறையில் அவளிடமிருந்து பார்சலை வாங்கி மேஜையில் வெகு கவனத்துடன் வைத்தார்கள். வேறொரு செக்யூரிட்டி மெட்டல் டிடக்டரை கையில் எடுத்து, ஒரு செக்யூரிட்டி சூர்யாவின் தலைமுதல் கால் வரை செக் செய்தான். தங்கத்தில் பட்ட போது எழுந்த பீப் சப்தத்தை அவர்கள் பெரிய விஷயமாகவே கொள்ளவில்லை.

கடவுளே

பார்சல்.

அதற்குள் மேலும் இரு செக்யூரிட்டிகள் கூட,

"பார்சலில் என்ன வைத்திருக்கிறீர்கள்" என்று அதிகாரக் குரலில் கேட்க,

''தெரியாது'' என்று சொல்லும் போதே சூர்யாவிற்கு ஏதோ தப்பு செய்த உணர்வு அவளறியாமல் தோன்றியது. ஆனாலும் தன்னைச் சமாளித்து, அதுவரை பிடித்திருந்த பயத்தை ஒதுக்கி,

இது ஒரு பிறந்த நாள் பரிசு. என் தாத்தாவின் தோழர் இன்று ரெயிலில் மதுரை செல்வதால் கொடுத்தனுப்பக் கொண்டு வந்தேன்'' என்று அவள் சொல்ல அதே நேரத்தில், மடிப்புக் கலையாத போலீஸ் உடையில் மிகக் கம்பீரமாக வந்து நின்றவனைக் கண்டதும் அவள் கூட இருந்த செக்யூரிட்டிகள், விறைப்பாக நின்றபடி சல்யூட் அடிக்க ஒரு செக்யூரிட்டி போலீஸ் சூர்யாவைப் பற்றிச் சொல்ல,

சூர்யாவின் முகம் குப் என்று சிவந்து போனது.

இப்போது சந்தேகப்படும் படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்பது அவளல்லவா?

பழிக்குப் பழியாக அவளை மாட்டி விட்டு விட்டால்?

உதவிக்கு வர மறுத்து விட்டாள்?

எத்தனை முறை ஒரு நல்ல காரியம் செய்ய நினைத்தவளை தவறாக கணித்திருக்கிறாள்?

ஆனால் அவனின் பார்வை ஒரு நொடிக்கூடச் சூர்யாவின் முகத்தை விட்டு விலகவில்லை.

எப்பொழுதுமே அரசியாக நடமாடியவளுக்கு, குற்றவாளியாக சந்தேகப்படும்படியாக நிறுத்தி வைத்தது பதட்டமடையவைத்தது. அதிலும் ரிஷியின் முன்னிலையில் பெருத்த அவமானமாக உணர்ந்தாள்.

ரிஷி, உடன் இருந்த செக்யூரிட்டிகளிடம் என்ன சொன்னானோ? மேலதிகாரியின் கட்டளையில் நொடியில் அவர்கள்



விலகிப் போக ரிஷி சூர்யாவிடம், ''பார்சலை எங்கேயும் கீழே வைத்து யாரும் மாற்றி விடவில்லையே?'' என்று சூர்யாவிற்குத் தோன்றிய அதே சந்தேகத்தை கேள்வியாகக் கேட்டுச், சிறிது கவனத்துடன் பார்சலை திறந்து பார்க்க,

உள்ளேயிருந்தது சிறுவர்கள் விளையாட்டுப் பொருளான 'மெக்கானிக் செட்' நட்,ஸ்குரு, இணைப்புகள் என்று நிறைய மெட்டல்களை கொண்ட விளையாட்டுப் பொருள்.

கூடவே ஒரு எலெக்ட்ரானிக் பொம்மை, ரிமோட் கண்ட்ரோலுடன்!

சூர்யாவிற்கு சில நிமிடங்கள் அவள் மனதில் நிலவிய பதட்டம் தணிந்து சிரிப்பே வந்து விட்டது.

''கொஞ்ச நேரம் நான் பயந்தே போனேன்'' என்று சிரிப்பினூடே சொல்ல, நிமிர்ந்த அவளைப் பார்த்த ரிஷியின் பார்வை அவளின் சிவந்த உதட்டில் ஒரு கணம் நிலைத்து பின் இயல்புக்கு மாற, சூர்யாவிற்கு ஒரு கணம் நெஞ்சு துடிப்பதையே நிறுத்தியது.

மீண்டும் பார்சலை பிரித்த இடம் தெரியாமல் அவனே அழகாக ஒட்டினான். எந்த டிரெயின், எந்த கோச் என்று கேட்டுக் கொண்டு பார்சலை கையில் எடுத்துக் கொண்டு அவனும் அவளுடன் வர, சூர்யாவிற்குள் மெல்லிய இதம் பரவலாயிற்று.

பொதுவான விஷயங்களைப் பற்றி இருவரும் பேசினாலும் இருவரின் உள்ளமும் மற்றவரிடமிருந்து எதையோ எதிர் பார்த்தது உண்மை.

கூடவே வந்து ஸ்கூட்டியில் அவள் ஏறிச் செல்லும் வரை பார்த்துக் கொண்டிருந்தான் ரிஷி.

## 22

சூர்யாவிற்கு கடந்த சில நாட்களாகவே மனசு அவள் வசம் இல்லை.

சிந்தனைகள் சதா ரிஷியை பற்றியே சுற்றிக் கொண்டிருந்தன.

அன்று ரெயில்வே ஸ்டேஷனில் சின்னதாகக் கூட அவன் மேல் சந்தேகப்படவில்லையே. அவன் அருகில் அவள்தான் எத்தனைப் பாதுகாப்பாக உணர்ந்தாள்.

ரிஷியும் இங்கேதான் எங்கோ வீடு எடுத்திருக்க வேண்டும். சற்று தொலைவில் என்றாலும் நிறைய சமயங்களில் அவளால் அவனைப் பார்க்க முடிந்தது.

அன்றும் அப்படித்தான், வீடு நோக்கி ஸ்கூட்டியில் வந்து கொண்டிருந்தபோது ஒரு சிக்னலில் நிற்க வேண்டியதாயிற்று. ஏதேச்சையாகத் திரும்பி பக்கத்தில் நின்ற காரைப் பார்த்தபோது முகம் சிவந்து போயிற்று அவளுக்கு.

ரிஷி

ஆனால் தனியாக இல்லை. பக்கத்தில் பெண் அதுவும் உரிமையுடன் அவன் தோளில் முகத்தை சாய்த்துக் கொண்டு சட்டென்று முகத்தை திருப்பினாள் சூர்யா, நெஞ்சம் படபடத்தது.

வீடு வந்து சேர்ந்த பிறகும் சூர்யாவின் நெஞ்சப்படபடப்பு நிற்கவில்லை. அன்று ரோகன் ஹனிமூன் பற்றிப் பேசியதெல்லாம் நூற்றுக்கு நூறு சரியே தான்.



சும்மா விளையாட்டு பேச்சு என்றல்லவா இவ்வளவு நாளாகச் சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

ரிஷியுடன் அந்தப் பெண்ணை பார்த்ததிலிருந்து சூர்யாவின் நெஞ்சில் ஒரு விரோதமான உணர்வு பொங்கிக் கொண்டு கிளம்பியது. அது அவளைத் திணறடித்தது.

பொறாமை.

பொறாமையின் காரணம் புரிந்ததும், இத்தனை நாட்களாகக் கண் மூடித்தனமாக, புரிந்தும் புரியாமலிருந்த கேள்விக்கு நொடியில் விடை கிடைக்கச் சூரியாவின் கண்கள் கலங்கின, கண்ணீர் வழிந்தோடியது.

காதல்

எதிர்காலமே இல்லாத காதல், ரிஷியின் மேல் காதல், வேறு ஒருத்திக்கு சொந்தமாகப் போகிறவன்.

அடுத்த முட்டாள் தனத்திற்கும் தான் தயாராகி விட்ட கேவலத்தை எண்ணிச் சூர்யாவின் நெஞ்சு நைந்து போனது.

## 23

மறுநாள் சூர்யா வெகுவாக தன்னை நிதானித்துக் கொண்டாள். இரவின் தனிமை அவளை பலவற்றையும் யோசிக்க வைத்தது.

நடக்கவே முடியாத விஷயம் என்று தன் காதலை வே... யிட்டு அடைத்தாள் சூர்யா? ஆனால் அவளின் காத... வேலியினுள் அடைபடவே மறுத்தது.

கர்த்தி வெந்துப் போனாள். இருடா வேட்டு வைக்கிறேன். உன் சந்தோஷத்திற்கு வேட்டு வைக்கிறேன் என்று முகம் பாறையாக இறுக முணுமுணுத்தவள், அதற்கான வேலையில் இறங்கிவிட்டான்.

சூர்யாவின் நிம்மதியும் பறிபோனது. தொடக்கத்தில் அவள் ரிஷியைப் பற்றி செய்து வைத்திருந்த அனுமானம் சரியே தானா?

ஆனால் அவள் இதயத்தில் சிந்தும் ஒவ்வொரு துளி உதிரமும் அவன் பெயரையே உச்சரிக்கையில் அதைத் தடுக்க வழி தெரியாமல் சோர்ந்து போனாள்.

ஒரு கெட்டவனிடம் அவள் இதயம் பறிபோனது அவளால் ஜீரணிக்க முடியவில்லை. இந்தப் பெண் சொல்வது பொய் என்று யாராவது நிரூபிக்க மாட்டார்களா என்று ஏங்கியது அவள் நெஞ்சம்.

மறுநாள் காலையில் தாத்தாவுடன் அவள் 'வாக்கிங்' சென்ற போது இடையில் வந்து அவர்களுடன் நடையில் இணைந்த ரிஷியைக் கண்டும் காணாதது போல் நடந்தாள்.

அவன் சொல்லிய ஹலோவிற்குப் பதில் 'ஹலோ' கூடச் சொல்ல பிரியமில்லை அவளுக்கு.

சூர்யாவின் செய்கையில் ரிஷிக்குப் புருவங்கள் நெரிந்தது. அவன் பார்வை யோசனையானது வாக்கிங் முடித்து விட்டு வீட்டுக்கு வந்தவளுக்கு மனசில் நிம்மதி துளி கூட இல்லை. அலைப்புற்ற மனதை நிலை படுத்தவும் வழி தெரியவில்லை. சற்று நேரம் பொறுத்துப் பார்த்த சூர்யா, தனிமையில் பைத் யம் பிடிக்கும் நிலை வந்துவிடும் என்று உணர்ந்து த்தாவிடம் சொல்லிக் கொண்டு லாவண்யா வீட்டிற்கு ளம்பினாள்.



வழியில் வண்டியில் பெட்ரோல் போடுவதற்கு 'பெட்ரோல் பாங்'கில் வண்டியை நிறுத்தினாள். நிறுத்தியது தவறு என்று பக்கத்தில் நின்றிருந்த காரில் இருந்த வைசாலியைப் பார்த்ததும் உணர்ந்தாள். எப்படி இருக்கிறீர்கள் நலமா? என்றெல்லாம் விசாரித்து விட்டு, பின் உங்களிடம், ரிஷி தன் பாச்சா ஒன்றும் பலிக்க வில்லை என்றதும் வேறு பெண்ணிடம் தன் கைவரிசையைக் காட்டிக் கொண்டிருக்கிறார் தெரியுமா?

இப்பத்தான் ஸ்பென்ஸரில், ரிஷியை அந்தப் பெண்ணுடன் பார்த்துவிட்டு வந்தேன். பப்ளிக் பிளேசில் என்ன அசிங்கமெல்லாம் பண்ணிக் கொண்டிருக்கிறான் தெரியுமா? இவனை எல்லாம் மக்களை காக்க என்று அவதரித்த மகான் மாதிரி பேப்பரில் இண்டர்வ்யூ கொடுப்பதில் ஒன்றும் குறைச்சலில்லை. இவனின் முகத்திரையைக் கிழித்து, அவனின் கபட நாடகத்தை சந்தி சிரிக்க வைப்போமா சூர்யா. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்'' என்று மூச்சுவிடாமல் பேசியப்படி கேட்க,

சூர்யாவிற்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை. ரிஷியை வேண்டும் என்றே தப்புத் தப்பாக அவள் சொல்வது போல் இருந்தது. அதனால் ''நேரமாகிவிட்டது பிறகு சந்திப்போம்'' என்று மேற்கொண்டு பேச்சை வளர்த்தாமல் ஸ்கூட்டியை ஸ்டார்ட் செய்தாள்.

வண்டி நேராக ஸ்பென்சருக்குதான் சென்றது. இப் பொழுதுதான் பார்த்தேன் என்றாளே. அவள் சொன்ன உண்மையாக இருக்கும் பட்சத்தில் இன்னும் அங்கே தானே இருப்பார்கள். போய் பார்த்துவிட்டு வர எண்ணி சூர்யா வேகமாக ஸ்கூட்டியை ஓட்டினாள். ஸ்பென்சரில் ஒவ்வொ அடுக்காக அவ்வளவு கூட்டத்தில் எப்படி அவர்களை தேடுவது என்று யோசித்துக் கொண்டே ஸ்பென்சர் காம்

ளக்கில் 'பார்க்கிங்கில்' வண்டியை நிறுத்திவிட்டு கட்டடத்தை நோக்கி நடந்தவளுக்கு, ஒவ்வொரு மாடியாக ரிஷியை தேடும் வேலைக்கு அவசியமே ஏற்படவில்லை.

ஒரு அழகிய இளம் பெண்ணைக் கை பிடித்து ஒவ்வொரு படியாக நிதானமாக இறங்கி ஸ்பென்ஸரில் இருந்து வெளியே வந்துக் கொண்டிருந்தவன் ரிஷியேதான் விட்டால் அந்த பெண்ணைத் தூக்கிக் கொண்டே நடப்பான் போல, அவன் கண்களில் தான் எத்தனை கரிசனம். அந்த பெண்ணின் கால் தரையில் படுவது கூட அவனுக்கு வலித்தது மாதிரி பாவனை வேறு.

சூர்யாவிற்குப் பற்றிக் கொண்டு வந்தது அவன் மேல் மெல்லிய நூலிழையாக தொங்கிய காதல் அறுந்ததும் அப்போது தான்.



## 24

**வீ**ட்டில் பெரியவர்கள் எல்லாம் சேர்ந்து அமர்ந்து சூர்யாவிடம் முக்கியமான விஷயம் என்று சொல்லிப் பேசத் தொடங்கினார்கள்.

அது அவள் கல்யாணத்தைப் பற்றியது.

''படிப்பை முடிச்சாச்சில்லையா. கல்யாணத்தை முடிச்சிடலாம்னு பார்த்தோம். இப்ப நல்ல இடத்தில் இருந்து மாப்பிள்ளை வந்திருக்கு. உன் கிட்டேயும் ஒரு வார்த்தை கேட்டு விடலாம்னு, நீ என்னடா சொல்றே''



எல்லாரும் கூடி இருந்து பேசத் தொடங்கும் போதே இப்படி ஏதும் விஷயம் இருக்கும் என்று சூர்யாவிற்குச் சந்தேகம் இருந்ததால், அதிர்ச்சியை அவள் முகம் பிரதிபலிக்கவில்லை. மாறாக,

''கல்யாணம் இப்ப வேண்டாமே, வேலைக்குப் போய் கொஞ்சம் 'செட்டில்' ஆனப்பின் பார்க்கலாமேப்பா'' அவள் பதிலில் நிறைய தெளிவு இருந்தது.

''அந்தக் காலத்தில் ஆண்கள் மட்டுமே 'செட்டில்' வார்த்தையை உபயோகித்தார்கள். இப்போது பெண்களும் 'வேலை' செட்டில் என்று பேசத் தொடங்கிவிட்டதா?'' விஸ்வநாதரின் குரலில் நக்கல் இழையோடியதோ?

''ரிஷியை மணந்தால் வேலைக்குப் போய்தான் ஆக வேண்டிய நிலையில்லை'' என்று மாதவி முகம் எல்லாம் பூரிப்பில் ஜொலிக்க சொல்ல,

''யார்... பெயர் என்ன சொன்னீங்க...''

சூர்யாவிடமிருந்து கேள்வி வெகு வேகமாக பிறந்தது.

''ரிஷி, உனக்கும் தெரியுமே'' இது நந்தகுமார்.

ரிஷி... ஓர் கணம் நெஞ்சு துடிப்பை நிறுத்தியது. எல்லாம் இந்த தாத்தாவின் வேலையாக இருக்கும், நன்றாகவே அவன் அவரை மயக்கி வைத்திருக்கிறான். சாதாரணப் பேச்சில் மசியவில்லை என்றதும் திருமணப் பேச்சை எடுக்கிறானோ? கயவன்.

''வேண்டாம்பா, எனக்குக் கல்யாணமே வேண்டாம். நான் இப்படியே இருந்திட்டு போறேன்'' ஒரு நொடி கூட யோசிக்காமல் பதில் அவளிடமிருந்து வர, விஸ்வநாதர் பேத்தியைக் கூர்ந்து கவனிக்கலானார்.

''காரணமில்லாமல் வேண்டாம்ன்னு சொல்லக் கூடாது. நீ ஒன்றும் சின்ன பெண் இல்லை. இருபத்திரண்டு வயதாகிறது.

கல்யாணம் இந்த வயதில் பண்ணிக் கொள்ளாமல் வேறு எந்த வயதில் பண்ணுவார்களாம்'' மாதவி சொல்ல.

''விடு மாதவி, கல்யாணம் என்று சொன்னால் எந்தப் பெண் எடுத்தவுடன் சரி என்று சொல்லுவாள்? சூர்யா நீ யோசிக்க பதில் சொல்.''

''இதுலே யோசிக்க ஒன்றுமேயில்லை. நான் ரிஷியைக் கல்யாணம் செய்து கொள்ள முடியாது'' அழுத்தம் திருத்தமாக சொல்லியபடி எழுந்து போகும் பேத்தியை யோசனையோடு பார்த்தார் விஸ்வநாதர்.

நந்தகுமாரும், மாதவியும், சூர்யாவின் பேச்சில் ஒன்றும் புரியாமல், என்ன விஷயமாக இருக்கும் என்று விவாதிக்கத் தொடங்கினார்கள்.

செய்தி அறிந்த ரிஷிக்கும் ஒரே திகைப்பு.

நிறைய முறை சூர்யாவின் கண்களில் ஆர்வத்தைப் பார்த்திருக்கிறான். அவள் தன்பால் ஈர்க்கப்பட்டதை உணர்ந்திருந்தான். ஆனால் இப்போது எல்லாம் எதிர் மறை ஒன்றும் விளங்காமல் தவித்தான். வெள்ளை காக்கையை கூட பார்த்தாலும் பார்க்கலாம் ஆனால் இந்த பெண்களின் மனதிலுள்ளதை யாராலும் பார்க்கவே முடியாது என்று வெதும்பினான்.

விஷயம் கேள்விப்பட்ட ரேவதிக்கும் அதிர்ச்சி, மகனுக்கு எந்த விதத்திலாவது உதவ வேண்டும் என்று யோசிக்கத் தொடங்கினார் அவருக்குமே சூர்யாவை பார்த்த மாத்திரத்தில் பிடித்துப் போயிருந்தது. ஒரு முறை ரிஷி இதுதான் உங்கள் மருமகள் என்று தூரத்தில் இருந்து அவளை அவளுக்குக் காட்டிக் கொடுத்திருந்தான்.

ரிஷியின் மனதில் நீங்கவே முடியாத இடத்தில் சூர்யா நிலையாக வீற்றிருந்தாள்.



அன்று விஸ்வநாதரும் சரத்தும் பேசிக்கொண்டிருக்கையில், ரிஷியின் பெயர் அடிபட, சூர்யாவின் கவனமும் அவர்கள் பேச்சில் திரும்பியது.

''எப்படித் தாத்தா, உங்களுக்கு ரிஷி ப்ரண்ட் ஆனார்? தினமும் போன் போட்டு பேசறீங்க'' சரத் கேட்க,

விஸ்வநாதர் சூர்யாவை ஒரு பார்வை பார்த்தபடி ''அவருக்கு ஏதோ 'ஹெல்ப்' வேண்டுமாம் நான் முடிச்சு தரேன் என்று சொன்னேன், அதைப் பற்றி பேசிக் கொண்டிருந்தோம்'' என்றார்.

''அவ்வளவு சாதித்தவர், உங்ககிட்டே ஹெல்ப் கேட்டாரா? ஆச்சர்யம்தான். அவ்வளவு நெருக்கம் என்றால் ரிஷியை ஒரு நாள் வீட்டிற்கு கூப்பிடுங்களேன். என் ப்ரண்ட்ஸ் கிட்டே எல்லாம் பெருமையாகச் சொல்லணும்'' சரத் ஆர்வமாக கேட்க,

''உன் ப்ரண்ட்ஸ் கிட்டே பெருமையடிக்க அருமையான விஷயம் ஒன்று இருக்குதுடா, அதுக்கு உன் செல்ல அக்கா வாயைத் திறக்கணுமே'' என்றவர் சூர்யாவின் முறைப்பை கவனித்துக் கொண்டே ''நாளை மாலை வீட்டிற்கு வரேன்னு சொல்லியிருக்கார். அப்ப பார்த்துக் கோயேன்'' என்று சொல்ல,

ரிஷி நாளை வீட்டிற்கு வருகிறான் என்ற செய்தியில், சூர்யாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

மறுநாள் அவன் வந்து போகும் வரையில் விஸ்வநாதர் எவ்வளவோ முறை கூப்பிட்டும், தன் அறையை விட்டு வெளியே வரவேயில்லை அவன்.

''என்ன, ஏது என்று ஒன்றும் சொல்லாமல் முடியாது, மாட்டேன், வேண்டாம்ன்னு என்ன வீம்பு இது'' என்று

விஸ்வநாதர் சூர்யாவைக் கண்டிக்க, சூர்யா தன் மனதி லிருந்ததைக் கொட்டி விட்டாள், ''ரிஷி நல்லவர் இல்லை தாத்தா. நானே பார்த்தேன் உதட்டைக் கடித்துக் கொண்டு அவன் சொல்ல,

விஸ்வநாதர் கண்களை விரித்தார். பின்,

''தாத்தா செய்தால் அதில் தப்பு இருக்குமா சூர்யா? உன் வரையில் முதலில் இருந்தே நீ ரிஷியைப் பற்றி கண்டு பிடித்தது எல்லாமே தவறாகத்தானே இருந்தது. ஒரே கல் தடுக்கி இரு முறை இடறி விழுவது பழ மொழிக்கே கேவலம், எல்லா விஷயத்திலும் தெளிவாக முடிவெடுக்கும் நீ, ரிஷி விஷயத்திலும் மட்டும் ஏன் இப்படி சொதப்பு கிறாயோ என்றே தெரியவில்லை. நினைத்தால் சிரிப்பு வேறு வருகிறது என்று சீரியஸாக தொடங்கிப் பரிகாசமாக முடிக்க,

''ஆனால் இது நிஜம் தாத்தா ரிஷி சரியானவரில்லை. நீங்கள் நம்பாமல் கேலி செய்வீர்கள் என்று தான் காரணம் சொல்லாமலேயே இருந்தேன் இப்போது சொன்னதும் தப்புதான். நான் ஒன்றும் உங்கள் கிண்டலுக்கும், கேலிக்கும் ஆளில்லை'' என்று கண்களில் ஜொலிக்கும் வைரத்தோடு சொல்லிவிட்டு பொத்தென்று சோபாவில் அமர்ந்தாள் சூர்யா.

மறுநாள் தொலைபேசி கிணுகிணுக்க, எடுத்து 'ஹலோ' சொன்னவள் சூர்யா. மறுமுனையில் ரிஷியின் குரல் கேட்க பட்டென்று போனை வைத்தாள்.

இவனிடம் பேச என்ன இருக்கிறது?

பேசினால் உள்ளூர இளகிவிடுவாளோ என்ற பயமா?

மீண்டும் அன்று மாலையே நேரில் வர, வெளியே சென் றிருந்த சூர்யா வாசலில் அவன் கார் நிற்பதைக் கண்டவுடனே,



தன் ஸ்கூட்டியின் வேகத்தை அதிகப்படுத்தி பக்கத்தில் லைப்ரரி, நர்சரி என்று சுற்றி அலைந்து விட்டு அவன் போன பிறகு வந்தாள்.

அவள் ஸ்கூட்டி வீட்டு வாசலில் ஸ்லோவாகி பின் ஸ்பீட் எடுத்தது. யாருக்குப் புரிந்ததா இல்லையோ காத்திருந்த ரிஷிக்கு நன்றாகவே புரிந்தது.

சூர்யாவிடம் எந்த முறையில் பலன் கிடைக்காமல் ரிஷி தவித்துப்போனான். விஸ்வநாதரின் மூலமாக அவனுக்கு நெருங்கினாலும் சூர்யாவின் கோபத்தின் காரணம் தெரிந் தாலும், சரிவர ஒன்றும் புரியாத நிலை. அவளைப் பொறுத்த வரையில் மன்னிக்க முடியாத பெரிய தவறு எதையும் செய்ததாக நினைவில் இல்லை. சில சமயங்களில் சூர்யாவின் மேல் கோபம் பெருகினாலும், அவளை இழந்து விடக் கூடாது என்பதில் குறியாக இருந்தான்.

அவன் அவனின் பொக்கிஷம் அடுத்த வாரம் டெல்லி சென்று 'சார்ஜ்' எடுக்க வேண்டும். அதற்கு முன் சூர்யாவின் விஷயத்தில் தெளிவு பிறந்து விட வேண்டும். இல்லை யென்றால் அவன் செய்யும் வேலையில் கவனம் சிதறப் போவது நிச்சயம்.

மறுபடி உதவிக்கு விஸ்வநாதரைத்தான் அணுக வேண்டி யிருந்தது.

ரேவதிக்கு, மகனின் கல்யாண விஷயம் எப்பொழுது எடுத்தாலும் தடைபடுகிறதே என்ற கவலை அவளறி யாமலேயே உள்ளத்தில் பெருங்கவலையாக மாறிவிட, ஜாதகம், பரிகாரம் என்று கோவில்களுக்குச் செல்லத் தொடங் கினாள்.

## 25

டிரஸ் மாற்றிக் கொண்டு வெளியே வந்த பேத்தியைக் கண்டதும் தொண்டையைச் செருமினார் விஸ்வநாதர்.

''வெளியே கிளம்பிட்டிருக்கியா சூர்யா.''

''ஆமாம் தாத்தா. வீட்டில் ஒரே போர், காலேஜ்லே ஏதோ செமினார் இருக்கு போல போயிட்டு வரலாம்னு பார்த்தேன் தாத்தா.''

''ஆமாம்,போக வேண்டியதுதான் என்று ஆமோதித்தவர், போகிற வழியில் இந்தக் கவரை இந்த அட்ரஸில் கொடுத்து விடுகிறாயா?'' என்றார்.

ரெஜிஸ்டர் போஸ்ட் போல இருந்த பெரிய ப்ரவுன் நிற காகிதக் கவரை அவர் நீட்ட சூர்யா வாங்கிக் கொண்டாள்.

''பத்திரம் ஞாபகமாக போகும் போதே கொடுத்துவிடு'' என்று ஒரு முறைக்கு இரு முறையாகச் சொல்லி அனுப்பினார்.

அட்ரஸை ஒரு முறை படித்தாள். காலேஜ் போகும் வழியில் தான் இருந்தது.

ஏதாவது பப்ளிஸிங் ஆபீஸாக இருக்கும் என்று குறிப்பிட்ட அட்ரஸைத் தேடிக் கண்டு பிடித்தவள், அது ஒரு பெரிய அழகிய பங்களாவாக இருந்தது.

''அட யார் வீடு என்று தாத்தாவிடம் கேட்காமல் வந்தோமே'' என்று வீட்டை ரசித்தபடி ஸ்கூட்டியை பார்க் செய்தாள்.



தோட்டக்காரன், செக்யூரிட்டி என்று அங்கு நின்று கொண்டிருந்தவர்கள். ஒருவரும் அவளை என்ன ஏது என்று கேட்காமல் தங்கள் போக்கில் வேலையைப் பார்த்தது சூர்யாவிற்கு அதிசயமாக இருந்தது.

ஒரு புதுமனுஷி வந்தால் என்ன? ஏது? என்று கேட்க வேண்டாமா? என்ன லட்சணத்தில் வேலை பார்க்கிறார்கள் என்று அலுத்தபடி காலிங்பெல்லை அமுக்கினாள்.

சில நொடிகளில் கதவு திறந்தது.

திறந்தவன் ரிஷி.

சிலைப் போல் நின்று விட்டாள் சூர்யா. கண்களில் பட்டாம் பூச்சிகள் பறந்தன. தாத்தாவின் விளையாட்டு புரிந்து பயங்கர எரிச்சல் வந்தது. இவர் எனக்கு தாத்தாவா? இல்லை இவனுக்கா? என்று உள்ளுக்குள் பொங்கிப் பொங்கிக் கோபம் கொப்பளிக்க, அடக்கிக் கொண்டு,

சட்டென்று கையில் இருந்த காகிதப் பேப்பரை அவன் முன் நீட்டினாள்.

''தாத்தா கொடுக்கச் சொன்னார்'' என்றவள் அவன் வாங்கும் எண்ணமே இல்லாமல், அவளையே வைத்த விழி மாறாமல் பார்க்க, கவரை அங்கேயே விட்டெறிந்து விட்டுப் போகலாமா? என்ற எண்ணம் அவளுக்குள் ஓடியது. அதைக் கண்டு கொண்டவன் போல, நீண்டிருந்த அவள் கரங்களை சட்டென்று பற்றி வீட்டிற்குள் இழுத்துக் கதவை மூடினான்.

திகைத்தாள் சூர்யா.

தன்னை நிலைபடுத்திக் கொண்டாலும், நெஞ்சி பொங்கிய கோபத்தை கட்டுப் படுத்த முடியவில்லை. கண்க சிவக்க, அவனைப் பார்வையால் துளைத்தபடி, வார்த்தைக உதட்டில் துடிக்க, அவள் நிற்க,

ரிஷி மார்பின் குறுக்காகக் கைகளைக் கட்டியபடி சுவரில் சாய்ந்து நின்று,

''எனக்கு உன்னிடம் பேச வேண்டும் சூர்யா. எப்படி முயற்சித்தாலும் நீ ஒத்துழைப்புக் கொடுக்க மறுத்ததால் எனக்கு இதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. ப்ளீஸ் உட்கார்'' என்று கெஞ்சுதலாகக் கேட்க, சூர்யா நின்ற இடத்திலிருந்து நகரவேயில்லை.

''சூர்யா நான் உன்னை மணக்கக் கேட்டவன். எனக்கு நீ மறுப்பதன் காரணம் தெரிந்து கொள்ள உரிமையிருக்கிறது. அதோடு உனக்கும் என்மேல் பிடித்தம் இருந்தது என்பதை அறிந்து கொள்ளாத முட்டாளும் நான் இல்லை. ஏதோ விஷயம் இல்லாமல் நீ முறுக்கிக் கொண்டிருக்க மாட்டாய் என்று எனக்குப் புரிகிறது. ஆனால் என்ன வென்று நீ சொல் லாமல், அதை தீர்க்கவே முடியாது.''

''தீர்க்கவே முடியாத காரணங்கள் இருக்கும் போது அதைப் பற்றி உங்களுடன், பேச எனக்குத் துளி கூட விருப்பம் இல்லை. வேண்டும் என்றால் அந்த வைசாலியுடன் இதை போல பேசி, அவளுக்கு வாழ்வு கொடுங்கள்.''

உதடு இறுகிப் போயிற்று ரிஷிக்கு. வைசாலி அவளா?!

என்ன சொல்லி இவள் மனதை புண்படுத்தி வைத்திருக் கிறாளோ? சொன்னால் சூர்யா புரிந்து கொள்ளவேண்டுமே என்று ரிஷிக்குத் தவிப்பாக இருந்தது.

''என்ன இதற்கு பதில் சொல்ல முடியாதில்லையா? ங்கள் லீலைகள் எல்லாம் எனக்குத் தெரியும். நல்ல னிதனாக வேஷம் போடாமல் இத்தோட விட்டு விடுங்கள்'' ன்று தாங்க முடியாமல் சூர்யா சீற.

ரிஷி கண்களில் கூர்மையுடன் அவள் சொல்வதைக் ட்டவன், ''லீலைகள் என்று பன்மையில் சொன்னாயே,



வேறு யார், யார் என்று தான் உனக்குத் தெரியும் போல தெரிகிறதே அதையும் சொல்லி விடேன் என்று கேட்க,

''ஆகா சொல்லிவிடுகிறேன், ரொம்ப பெருமைப்பட வேண்டிய விஷயம் தான் இல்லையா,'' என்று நக்கலாக இரு வார்த்தைகள் கேட்டு விட்டுபின்;

''அன்று நான் என் கண்களால் பார்த்தேன். நீங்கள் ஸ்பென்சர் ப்ளாசா வாசலில் கைகள் இறுக பற்றிக் கொண்டு, இடுப்பிலும் ஒரு கைபற்றி ஒரு பெண்ணுடன் நீங்கள் சல்லாபித்ததை''.. என்று சொன்னவளுக்கு அதற்கு மேல் பேச முடியாமல் போயிற்று. காரணம், ரிஷியின் முகம். அதில் தெரிந்த வேதனை. அதில் உண்மை சத்தியமாக இருந்தது. ஒன்றும் பதில் சொல்லாமல் உள்ளே சென்றான்.

ஒரு நிமிடம் திணறிப் போனாள் சூர்யா. ஒட்டு மொத்தமாக எல்லாரிடமும் நல்ல பேர் வாங்கிய மனிதன், அப்படிப்பட்ட வனுக்குக் கெட்ட பெயர் வாங்கி கொடுக்க ஏதேனும் சூழ்ச்சி வேலையாக இருக்குமோ? முகத்தில் வேர்த்தது அவளுக்கு- வைசாலியின் பேச்சில் அவளுக்குத் தொடக்கத்திலிருந்தே சந்தேகம் இருந்தது உண்மைதானே.

மீண்டும் வந்தவன் கைகளில் ஆங்கில செய்தித்தாள் இருந்தது. அதில் இருந்த புகைப்படத்தைக் காட்டி,

''இதோ இந்த பெண்ணைத்தானே நீ பார்த்தாய். இவள் மேரி இவளும் மத்திய கமாண்டோ பிரிவைச் சேர்ந்தவள். சூர்யா பங்களூரில் நடந்த ஓர் என்கவுண்டரில் கால்களில் புல்லட் பாய்ந்து இன்னும் சிகிச்சை எடுத்துக் கொண்டிருப்பவள். நம்ப முடியவில்லை என்றால், நியூஸ் எடுத்து படித்துப் பார், நாட்டிற்காக உழைத்ததில் கால் இழந்து நடக்க சிரமப்பட்ட வளை, விட்டால் தூக்கிக் கொண்டே நடந்திருப்பேன். தவறா?''

கூடவே வைசாலியின் கதையையும் அவன் சொல்ல, சூர்யாவிற்கு உள்ளே சுட்டது. மன்னிப்பு கேட்க நா எழும்ப வில்லை.

''அந்தப் பெண்ணை வேறு உங்களுடன் ஒரு நாள் காரில் பார்த்தேனா? மிகவும் ஒட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். எனக்கு எப்படி வந்தது தெரியுமா?'' என்று சூர்யா மெல்ல முணங்கலாக வார்த்தைகளை வடிக்க,

''அம்மா கல்யாணம் நிச்சயம் செய்ததிலிருந்து அவள் தானாகவே உரிமை எடுத்துக் கொண்டு என்னருகில் வரு வாள்.

''திருமணப் பேச்சு முடிந்து விட்டப் பிறகு அன்று, தற்செயலாக வழியில் சந்தித்தேன். கார் ரிப்பேர், லிப்ட் தாருங்கள் என்று கேட்டாள். சரி இதில் என்ன விரோதம். தெரிந்த பெண்தானே என்று ஏற்றிவிட்டேன். பிறகு அவள் என்னை கவர என்று சில முயற்சிகள் செய்து பார்த்தப்போது அருவருத்துப் போய்விட்டேன். எல்லாம் நாடகம்; சும்மா ப்ரஸ்டீஜ்க்காக என்னைக் கல்யாணம் செய்து கொள் பிரியப்பட்டிருப்பாள் என்று நினைக்கிறேன். நான் அறிந்தவரையில் அவளுக்கு நிறைய ஆண் சிநேகிதர்களும் உண்டு.''

அவன் பேசப் பேச அவள் முகத்தில் தெளிவு கண்டு, ''நம்புகிறாயல்லவா சூர்யா. வாழ்க்கையில் நம்பிக்கை முக்கியம். யார் எது சொன்னாலும் அப்படியே நம்பிவிடக் கூடாது.

எப்படி சூர்யா அன்றும் அப்படித்தான் முதல் நாள் முதல் பார்வையிலேயே தவறாக என்னை எப்படிக் கணித்தாய் சூர்யா.'' அவள் கண்களில் பார்வையைப் பதித்தபடி கேட்ட அவன் கேள்வியில் வருத்தம் இழையோடியது.



கண்ணோடு கண் நோக்கி அவனைப் பார்த்த பார்வையில் சூர்யாவிற்கு சில நொடிகள் பேச்சே எழும்பவில்லை. அந்த நிறம், கருத்தடர்ந்து திருத்தமாக வெட்கப்பட்ட சுருண்ட சிகை, அழுத்தம், திருத்தமாக அமைந்திருந்த கன், மூக்கு, உதடு, பளீச்சென்று மின்னிய பற்கள் மிக முக்கியமாக அவன் கண்கள்...

வில்லனா? இவனா?

பின் எப்படி?... அவ்வளவு தவறாக கணித்தாள், எப்படி...?

ஆனால் அவன் கேள்விக்கு அவளிடம் பதிலும் இருந்தது.

''முன் பின் பார்த்தறியாத பெண்ணை முறைத்து முறைத்துப் பார்த்தால், நல்லவன் என்றா நினைப்பது?'' சிவந்த உதட்டில் இருந்து முணங்கலாக வார்த்தைகள் தெறிக்க,

''அட, கொள்ளை அழகுடன் பலமுறை கனவில் கண்ட ஓர் பெண் நடந்து போகும் போது பார்க்கவில்லை என்றால், நான் ஓர் ஆண்மகன் தானா?'' என்று கண்களில் மின்னல் வெட்டச் சொல்ல,

''அதுவும் அன்று ரோகன் வீட்டு பார்ட்டியின் போது நீ என்னைப் படுத்தின பாட்டில் அந்த வயர்லெஸ் கால் மட்டும் வந்திருக்காவிட்டால், என்னவெல்லாம் நடந்திருக்கும் தெரியுமா?'' என்று காரை மீண்டும் இயக்கியபடி சொல்ல, சூர்யாவிற்கும் அது நிமிடம் வரை சதா நெஞ்சை அழுத்தின கேள்வியை அவளையும் மீறி கேட்டு விட்டாள்.

''என்மேல் உங்களுக்கு எப்படி ஆசை வந்தது? துப்பறியும் சாம்புபோல் 'முட்டாள்' தனமாக உங்களுக்கு நிறைய சமயங்களில் நான் தோன்றியதே கிடையாதா?''

''இல்லையே... உன் தைரியம், துணிவு, நாட்டின் மேல் உள்ள அக்கறை நிமிர்வு இதெல்லாம் தானே 'முதலில்' உன்

பக்கம் என்னைச் சுண்டியிழுத்தது. பிறகு...'' என்று இழுத்தவன் பார்வை சூர்யாவின் சிவந்த வடிவான பட்டு இதழ்களின் மேல் படர, அவன் பார்வை சென்ற இடம் புரிந்து,

சூர்யாவின் முகம் ரத்தமெனச் சிவந்தது. அவள் முகச் சிவப்பு, அப்போது உருமாறி வந்த அந்திவான சிவப்புடன் போட்டியிட்டது.

அவளின் முகச்சிவப்பைக் கண்ட ரிஷியின் முகம் அவள் மேல் ஆவலாகப் படர்ந்தது.

அவர்கள் வாழ்க்கையில் இனி என்றும் வசந்தமே.

★ ★